



இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும்
அரசொல்லை அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னத்துரை இரத்தினசிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# இரத்தினமலர்

05.12.2025



இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும்
அரசொல்லை அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் சின்னத்துரை இரத்தினசிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# இரத்தினமலர்

05.12.2025



# சமர்ப்பணம்

எங்களுக்கு எல்லாமாயிருந்து
எம் உயர்வுகளுக்கெல்லாம்
துணைசெய்து
வரும் துன்பமெலாம் தான் தாங்கி
எங்கள் இன்பமொன்றே எண்ணமாகி
அர்ப்பணிப்பு,தியாகம்.அன்பு. கருணை
எனும்
பண்புகளால் எல்லோர் மனங்களும்
வென்று
செய்திட்ட ஆசிரியப் பணியால்
மேன்மைபெற்று
இன்றெம்மை விட்டு நீங்கிய
எங்கள் அன்புத் தெய்வத்தின்
பாதங்களுக்கு இம் மலர் சமர்ப்பணம்

**குடும்பத்தினர்.**



தோற்றம்
05.10.1937

மறைவு
05.11.2025

# அமரர்

# சின்னத்துரை இரத்தினசிங்கம்

## திதிவெண்பா

ஆண்டு விசுவா வசுவின்நல் லைப்பசி
பூண்டவோர் பூரணை நிறைநாள் - நீண்டபுகழ்
தவமுயர் இரத்தின சிங்கம் எமைநீத்து
சிவகாமி தாள்சேர்ந்த நாள்

ஆசிரியப் பணியின் ஆரம்ப நாட்களில்...



# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந்
தன்மையினாற் கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம் போல் மேனியிற் பால் வெண் நீறும்,
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே, யிந்த மாநிலத்தே!

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்,
கரையிலாக் கருணைமா கடலை,
மற்றவர் அறியா மாணிக்க மலையை,
மதிப்பவர் மனமணி விளக்கைச்,
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்
பெற்ற தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத வின்ப வன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
“பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
யறவாநீ யாடும் போதுன் னடியின்கீ ழிருக்க” வென்றார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் ...... பலகாலும்
பற்றியே மாதிருப் ...... புகழ்பாடி
முத்தனா மாறெனைப் ...... பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் ...... கருள்வாயே
உத்தமா தானசற் ...... குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் ...... கிரிவாசா
வித்தகா ஞானசத் ...... திநிபாதா
வெற்றிவே லாயுதப் ...... பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





## அமரர் சின்னத்துரை இரத்தினசிங்கம்

அவர்களின்

# வாழ்க்கைப் பதிவு

இலங்கைத் தேசத்தின் வடபால் அமைந்த யாழ்ப்பாண மண்ணில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பண்பாட்டுப் பூமி இணுவில் கிராமம். ஈழத்துச் சித்தர்கள் பலர் தோன்றியதும் அவர்கள் தங்கள் பாதம் பதித்து உலவியதுமான பெருஞ்சிறப்பு இக் கிராமத்துக்கு உண்டு. இணுவில் கிராமத்தின் புகழுக்கும் பெருமைக்கும் நிலைக்களானக அமைபவை அங்கு எழுந்து அருள்பரப்பும் ஆலயங்கள். இவ் ஆலயங்களுள் சிறப்பான வரலாற்றைக் கொண்ட ஆலயம் இணுவில் சிவகாமி அம்மன் கோவில். இவ் ஆலயத்தில் அமர்ந்து அருள்பாலிக்கும் சிவகாமித் தாயே தஞ்சம் என வாழ்பவர்கள் இணுவில் கிழக்கைச் சேர்ந்த மக்கள். ஐந்து தலைமுறைப் பராம்பரியம் தாண்டிய கருக்கற் பெரும் ஆலயம் இவ்வாலயம். இவ் ஆலயக் கோபுர நிழலிலும் அந்தணர் கை மணியோசை கேட்கும் அருகிலும் வாழக்கிடைத்த பெருமைக்குரியவர் அமரர் சீனியர் சின்னத்துரை எனும் விவசாயப் பெருமகன்.

விவசாயத்தை தன் தொழிலாகவும் இறைபத்தியைத் தன் வாழ்வாக வும் கொண்டு வாழ்ந்தவர் சின்னத்துரை அவர்கள். அவரது வாழ்வின் பலமாக அமைந்து நலம் சேர்த்தவர் அவரது இல்லத்துணையாள் அமரர் சின்னத்துரை கண்மணி அவர்கள். இவர்கள் இல்லறப்பயனின் முதன்மைவிளைவாக அமைந்த ஆறுபிள்ளைகளில் முதல் தலை மகனாய் 05.10.1937 அன்று பிறந்தவரே இன்று வானுறையும் தெய்வத்துடன் கலந்த அமரர் சின்னத்துரை இரத்தினசிங்கம் அவர்கள்.

இவருடன் கூடப் பிறந்தவர்கள் இரண்டு ஆண் சகோதரர்கள் மற்றும் மூன்று பெண்சகோதரிகள். முதலில் ஆண்மகவு பின் பெண்மகவு என ஒன்றன்பின் ஒன்றாய், ஒன்றுவிட்ட ஒன்றாய் குடும்பத்தை நிறைத்த அவர்கள் லீலாவதி, நடராஜா(குலசிங்கம்) சிவயோகம், கந்தசாமி, விமலராணி எனும் செல்வங்கள் ஆவார்கள்.

அமரர் இரத்தினசிங்கம் அவர்கள் குடும்பத்தின் தலைப்பிள்ளையாக வந்துதித்தமையால் தந்தை தாயுடன் சேர்ந்து குடும்பத்தின் பாரத்தை சுமக்கும் பெரும் கடமையைப் பொறுப்போடு செய்தார். தந்தையின் விவசாய நடவடிக்கைகளுக்கு துணைசெய்பவராகவும் தாயின் சிக்கனமிக்க சேமிப்பு நிறைந்த வாழ்க்கைப் பாணிக்கு கைகொடுப்பவராகவும் அவர் தன்கடமைகளை தவறாது மேற்கொண் டார். குடும்பப் பொருளாதார மேம்பாட்டுக்கு சிறுவயதிலிருந்தே பங்களிப்புச் செய்தாலும் கல்வியில் அக்கறையுடையவராக திகழ்ந் தமையால் தனது ஆரம்பக் கல்வியை சீனிப்புளியடி பள்ளிக்கூடம் என அழைக்கப்பட்ட இணுவில் அமரிக்க மிசன் ஆரம்பப் பாடசாலை யிலும் பின் இடைநிலைக் கல்வியை இணுவில் சைவமகாஜனக் கல்லூரியிலும் (இன்றைய இணுவில் மத்திய கல்லூரி) பெற்றார்.

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவுடன் மேற்கொண்டு படிப்பதற்காக தந்தையாரின் வழிகாட்டுதலையேற்று இலங்கை அரசாங்கவிவசாயக்கல்லூரியாகஅன்றுதிகழ்ந்தகமத்தொழிற்சாதனா பாடசாலை கிளிநொச்சியில் இணைந்தார். அங்கு 1959ஆம் ஆண்டு தனது இருபத்திரண்டாவது வயதில் இறுதிப்பரீட்சையை நிறைவுசெய்து மூன்றாம் வகுப்புச் சித்தியைப் பெற்றார். பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு, தோட்டக்கலை, பயிர்ப்பீடைகளும் சிற்றுயிர்களும், கம இயந்திரப் பிரயோகம், கூட்டுறவு ஆகிய பாடங்களில் தகமைபெற்றார். விவசாயத்துறை சார்ந்து தகுதியான பொருத்தமான அரச உத்தியோகம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பிருந்தும் அதனைப் புறந்தள்ளி தனக்கு ஆத்மதிருப்பதியை தரும் ஆசிரியப் பணியை நாடினார்.

மலையகத் தமிழ் மக்களின் கல்விவளர்ச்சி குறித்து அப்போது மலையக அரசியல் தலைவர்களாலும் கட்டாயத்தின் பேரில் தோட்ட முதலாளிகளினாலும் எடுக்கப்பட்ட முயற்சிகளின் பலனாக பல பாடசாலைள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கு கடமையாற்ற யாழ்ப்பாணத்தி லிருந்தே ஆசிரியர்கள் வரவழைக்கப்பட்டனர். ஆரம்பத்தில்

ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரம் தோட்டநிர்வாகத்துக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தமையால் இலாப நோக்கம் கருதிய அவர்கள் ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த ஊதியத்தையே வழங்க முன்வந்தனர். அத்துடன் மலையகச் சமூகம் கல்வியில் முன்னேற்றம் அடைவது தமது பெருந்தோட்டத் தொழிலுக்குத் தேவையான தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்வதற்குச் சவாலாக அமைந்துவிடும் என்பதால் பாடசாலைகளின் வளங்களையும் ஆசிரியர்களுக்கான வசதிகளையும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அல்லது குறைவான அளவிலேயே வழங்கினார்கள்.

அத்துடன் 1958ஆம் ஆண்டு ஏற்பட்ட சிங்கள் தமிழ் கலவரமும் யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குச் செல்வதை மந்தமாக்கியது. அங்கு பணிபுரிந்த பலரும் வேலையை கைவிட்டு அல்லது வேறு வேலையைத் தேடியவர்களாக வடக்குக்கு திரும்பினார்கள். இந்தப் பின்னணியிலேயே அமரர் இரத்தினசிங்கம் அவர்கள் 1960.09.27 அன்று லெவன்ற் எஸ்ரேட் தமிழ்க் கலவன் பாடசாலை எட்டியாந்தோட்டையில் ஆசிரியராக இணைந்து கொண்டார். அங்கு 1976.02.15 வரை ஏறக்குறைய 16 வருடங்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றினார். நிரந்தர அரச நியமனம் இன்மை, மிகக் குறைந்த ஊதியத்தினால் பொருளாதார நெருக்கடி, குடும்பத்தின் மூத்த பிள்ளை எனும் அடிப்படையில் பொருளாதார ரீதியாக பங்களிக்க வேண்டிய தார்மீகக் கடப்பாடு, சகோதரர்களின் வளர்ச்சிக்குத் துணைசெய்ய வேண்டிய கடமை என பெரும் சுமைகளைத் தாங்கியவராக அமரர் திகழ்ந்த போதும் தான் விரும்பியேற்ற ஆசிரியப் பணியை விட்டு விலகும் எண்ணம் அவருக்கு வரவில்லை.

மேற்குறிப்பிட்ட நெருக்கடி நிலமைகளினால் உளச்சோர்வு அடையும் வேளைகளில் இவரை எட்டியாந்தோட்டைக்கு வரவழைத்த இவரது ஒன்றுவிட்ட தமையானார் அமரர் பரமலிங்கம் அவர்கள் பெரும் துணையாகவிருந்தார். அங்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அவர் இவருக்கு ஆறுதலாக இருந்ததுடன் தொடர்ந்தும் மலையக மக்களின் கல்வி வளர்ச்சிக்குப் பங்களிக்க ஆசிரியராக கடமையாற்றும் உளத்தைரியத்தையும் வழங்கிவந்தார். அமரர் அவர்கள் இதனை தனது பிள்ளைகளுக்கு அடிக்கடி கூறுவதுடன் அமரர்

பரமலிங்கம் அவர்களின் படத்தை தனது வீட்டில் வைத்து பூசித்தும் வந்தார்.

இதேவேளை திருமண வயதை எட்டிய தனது மூத்த சகோதரி லீலாவதி அவர்களை இணுவிலின் மிக முக்கியமான குடும்பமான சித்தவைத்தியர் நன்னித்தம்பி சிவகாமசுந்தரி தம்பதிகளின் புதல்வர் பொன்னம்பலம் அவர்களுக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர் நிச்சயம் செய்தபோது அவர்களுடன் இணைந்து திருமணத்தை சிறப்பாகச் செய்து வைத்தார். சிவகாமசுந்தரி எனும் இயற்பெயரைக் கொண்டவர் தான் சாத்திரம்மா அல்லது பாக்குருட்டி அம்மா என அழைக்கப்பட்ட, மடிப்பிச்சை எடுத்து இணுவில் சிவகாமி அம்மன் கோவிலைத் தாபித்தவர்களுள் முதன்மையானவரான இறைசித்தமிக்க பெண்ணில்நல்லாள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மூத்த சகோதரியின் திருமணத்தை அடுத்து பெற்றோர்கள் அமரர் இரத்தினசிங்கம் அவர்களுக்கு திருமணம் செய்து வைக்க தீர்மானித்து பெண்தேடிய போது அளவெட்டியிலிருந்து இணுவிலில் திருமணம் முடித்து இவர்களுக்கு உறவினராக அமைந்த முன்னாள் கிராமசேவையாளர் அமரர் வேலும்மயிலும் தொடர்புகிடைத்தது. அதன் பயனாக அவரது இளைய சகோதரியும் அளவெட்டிக் கிராமத்தின் மிகப்பிரபலமான விவசாயப் பெருமக்களுமாகிய கதிரித்தம்பி முத்துத்தம்பி தம்பதிகளின் இளைய மகள் அன்னம்மா எனும் இயற்பெயரைக் கொண்ட பத்மராணி அவர்களை கரம் பற்றிக்கொண்டார்.

திருமண உறவின் வழி அமரர்களான முருகையா, சின்னராசா, திருமதி.சிவக்கொழுந்து இரத்தினம், தில்லையம்பலம், வேலும்மயிலும் (முன்னாள் கிராமசேவையாளர்–விதானையார்), துரைராசா, வீரசிங்கம் (முன்னாள் இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்) மற்றும் தம்பையா, சுந்தரலிங்கம் ஆகியோர் மைத்துனர்களாக வாய்க்கப் பெற்றனர்.

பத்மராணி அவர்கள் அமரரது வாழ்வில் துணையாகவிருந்து ஆசிரியத்தொழிலில் பயிற்றப்பட்ட தராதரத்தைப் பெற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தி வழிகாட்டியதுடன் விவசாய நடவடிக்கைகளில் கனதியாக ஈடுபடவும் துணைநின்றார். அமரர் அவர்களின் வாழ்வின் சவால்மிக்க காலங்களை தாண்டிப் பயணிக்க துணைநின்ற

துணைவியார் பின்னர் கொடிய புற்றுநோயின் தாக்கத்துக்கு உள்ளாகி இயற்கை அடைந்தமை பெருந்துயராக அமைந்தது.

தனது சகோதரி சிவயோகத்தை இணுவில் மேற்கைச் சேர்ந்த வர்த்தகப் பெருமகன் அமரர் கந்தையா தியாகராசா அவர்களுக்கும் இளைய சகோதரி விமலராணியை வெங்கடேஸ்வரா பாரவூர்த்திச் சேவை நிறுவனத்தை நடத்திய இணுவில் மேற்கைச் சேர்ந்த தொழிலதிபர் பஞ்சலிங்கம் இரத்தினசிங்கத்துக்கும் பெற்றோர் மற்றும் இரு சகோதர்களின் துணையுடன் மணம்முடித்து வைத்து அவர்கள் இல்லறச் சிறப்பு கண்டு மகிழ்ந்தார்.

அமரர் அவர்கள் தனது அனுபவத்தின் வழி விவசாயக் கற்கை நெறியைத் தொடர சகோதர் நடராஜாவுக்கு வழிகாட்டி உதவினார். பின்னர் அவர் அந்தத் துறை சார்ந்து காணி உத்தியோகத்தராக அரசநியமனம் பெற்ற போது இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தார். பின்னர் அவர் தனது விருப்பின் பிரகாரம் பாக்கியலட்சுமியைத் திருமணம் செய்த போது ஆசிர்வதித்து மகிழ்ந்தார்.

இளைய சகோதரர் அமரர் கந்தசாமி அவர்கள் தந்தையாரின் வழிகாட்டலில் நல்லூர் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தில் பணியாளராக இணைந்து களஞ்சியக் காப்பாளராக கடமையாற்றி ஒய்வுபெற்றார். இவர் இனம்காண முடியாத நோயினால் பாதிப்புற்ற வேளையில் மிகவும் துயரடைந்த அமரர் அவர்கள் அவ்வப்போது தனது இயலாமையுடனும் இளைய சகோதரரைச் சென்று பார்த்து வந்தார். இறுதியில் அவர் இயற்கை எய்தியபோது அதனால் பெரும் உளவலியைச் சந்தித்து தானும் பாதிப்புள்ளாகி மரணத்தின் வாயில் வரை சென்று பின் மீண்டார்.

எட்டியாந்தோட்டையில் 16 வருடங்களாக கற்பித்துக் கொண்டிருந்த அமரர் அவர்கள் 1976.02.16 தொடக்கம் இரத்தினபுரி கொலம்பகம அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நிவித்திகலைக்கு இடமாற்றம் பெற்றார். அங்கு 1978.05.31 வரை கடமையாற்றிய நிலையில் விசேட பயிற்றப்பட்ட ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளவதற்காக கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து கொண்டார். ஆசிரியர் பயிற்சியை நிறைவுசெய்த பின்னர் இரத்தினபுரி இறம்புக்கந்தை அரசினர் தமிழ் மகாவித்தியாலயத்தில் இணைந்து அங்கு 1985.04.01 வரை கடமையாற்றினார். அங்கு கடமையாற்றும்

போது அவ் வித்தியாசாலையின் பதில் அதிபர் கடமையைப் பொறுப் பேற்று பாடசாலையில் அமைந்திருந்த அதிபர் விடுதியிலேயே குடும்பத்தினருடன் தங்கியிருந்து தனது கடமையைச் சிறப்பாகச் செய்தார். இரத்தினபுரியில் கடமையாற்றும் காலப்பகுதியில் 1983ஆம் ஆண்டு கறுப்பு யூலை என அடையாளப்படுத்தப்படும் பெரும் சிங்கள தமிழ் இனக்கலவரம் மூண்டது. தென்னிலங்கையிலும் மலையகத்திலும் வாழ்ந்த வடக்கு வாழ் தமிழர்கள் பெரும் ஆபத்துக்களை எதிர்கொண்டார்கள். உயிராபத்துக்கள் உடமை இழப்புக்கள் என்பவற்றைச் சந்தித்து உயிரைக் கையில் பிடித்தபடி தமது பூர்விக இடமான வடக்கு மாகாணத்துக்கு தமிழர்கள் மீளத்திரும்ப வேண்டியிருந்தது. அமரர் அவர்களும் தனது குடும்பத்தினருடன் யாழ்ப்பாணத்துக்கு திரும்பினார்.

யாழ்ப்பாணம் திரும்பியபோதும் நாட்டுச் சூழ்நிலைகள் இயல்புநிலையை அடைந்த போது மீண்டும் இரத்தினபுரிக்குச் சென்று இங்கு 1985.03.31 வரை கடமையாற்றிய பின்னர் நிரந்தர இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணம் திரும்பினார். யாழ்ப்பாணம் திரும்பியதும் 1985.04.01 தொடக்கம் இளவாலை பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியப்பணியில் இணைந்து கொண்டார். அங்கு நான்கு ஆண்டுகள் கடமையாற்றி 1989 தொடக்கம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் இணைந்து 1997 ஓய்வுபெறும் வரை அங்கு பணியாற்றினார். அருணோதயக் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றும் போது கல்லூரியின் ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் திகழ்ந்தார். கல்லூரியின் வளர்ச்சிக்கும் இடப்பெயர்வுக் காலங்களிலும் மீள்குடியேற்றக் காலங்களிலும் கல்லூரியின் நிலைத்திருப்புக்கும் தன்னாலியன்ற பங்களிப்பை தனது அதிபர்களுக்கும் கல்லூரிக்கும் வழங்கினார்.

அமரர் அவர்கள் பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் அமரர் எஸ்.நீக்கிலாஸ்பிள்ளை அவர்களுடனும், அருணோதயக் கல்லூரியில் அமரர் ந.சிவபாதம், திரு.அ.சிறிக்குமரன், திரு.கி.மகேந்திரராஜா ஆகிய அதிபர்களின் தலைமைத்துவத்தின் கீழும் பணியாற்றினார். அதிபர்களின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு பல்வேறு வழிகளிலும் துணைநின்றதுடன் சக ஆசிரியர்களின் நட்புக்கும் அன்புக்கும் பாத்திரமாகவும் திகழ்ந்தார்.

அமரர் அவர்கள் தமிழ்ப் பண்பாட்டுடையான வேட்டி அணிவதையே தனது நிரந்தர பழக்கமாகக் கொண்டிருந்தார். அத்துடன் அமரரது நெற்றியில் எப்போதும் சந்தனப்பொட்டு திகழ்ந்த வண்ணமிருக்கும். நெற்றியில் உள்ள பொட்டு அவரது அடையாளமாக நிலைக்க அவரது மாணவர்கள் அவரை "பொட்டு வாத்தியார்" எனும் அடைமொழி கொண்டு அழைக்கலாயினர்.

ஆசிரியப் பணிக்கு சமாந்தரமாக விவசாயத்திலும் முனைப்புடன் செயற்பட்டார். கல்வி வழியாகவும், தந்தைவழியாகவும் தனது புகுந்த குடும்பத்தின் வழியாகவும் கற்றுக்கொண்ட விவசாய நுட்பங்களினால் வெங்காயம், புகையிலை, மரவள்ளி. பூசணி, மிளகாய் செய்கையில் தேர்ச்சிமிக்கவராகத் திகழ்ந்தார். ஆசிரியப் பணி ஒய்வுக்குப் பின்னர் முழுநேர விவசாயியாக மாறிய அவர் உடலில் வலுவுள்ளவரை விவசாயப் பணியைத் தொடர்ந்தார். எரிபொருள் நெருக்கடியான காலப்பகுதியில் கூட விவசாய சம்மேளனங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற உதவிகளைப் பெற்று விவசாயத்தை கைவிடாது தொடர்ந்தார்.

கூட்டுறவுத் துறையிலும் நாட்டம் கொண்டிருந்த அமரர் அவர்கள் அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராகி பின்னர் கிளை 4 இன் தலைவராகி அதன் வழி இயக்குனர் சபை உறுப்பினராகவும் திகழ்ந்தார். அமரர்கள் கனகரட்ணம் மற்றும் ஜெகதீசன் ஆகியோர் தலைவர்களாக சேவைபுரிந்த காலப்பகுதியில் இயக்குனர் சபை உறுப்பினராக இருந்ததுடன் சங்கம் இடம்பெயர்ந்த காலங்களில் சங்கத்தின் இடையறாத பணிக்குத் துணைசெய்தார்.

1982ஆம் ஆண்டு வாழ்வில் துணையாக இணைந்த தெய்வநாயகி மூலம் 1983 இல் மகன் சர்வேஸ்வராவையும் 1987இல் மகள் லாவண்யாவையும் பிள்ளைகளாகப் பெற்றார். பிள்ளைகள் இருவரினதும் உயர்வுக்காக தன்னை அர்ப்பணித்து வரும் துயரெல்லாவற்றையும் தான் தாங்கி பிள்ளைகளுக்கு வளமான மகிழ்ச்சியான எதிர்காலத்தைப் பரிசளித்தார். மகன் சர்வேஸ்வரா அருணோதயக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூ ரியிலும் தனது பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கல்வியலில் விஞ்ஞானமானி சிறப்புப்பட்டத்தைப் பெற்று இன்று அதே பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் விரிவுரையாளராகவுள்ளார். மகள் லாவண்யா

இணுவில் மத்திய கல்லூரியிலும் அருணோதயக் கல்லூரியிலும் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலைமானிப்பட்டத்தைப் பெற்று இன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உபவிடுதிக்காப்பாளராகப் பணிபுரிகின்றார்.

பிள்ளைகள் திருமண வயதை அடைந்ததும், 2010இல் மகன் தன் மனவிருப்பின்படி புங்குடுதீவைச் சேர்ந்த மறைந்த பேராசான் கலாநிதி க.சிவராமலிங்கம்பிள்ளை அவர்களின் மூத்த புதல்வன் அமரர்கள் சிவமோகன் திவ்வியபவானி தம்பதிகளின் மூத்த புதல்வி சிவநயனி அவர்களைக் கரம்பற்றிக்கொள்ள அவர்களது வாழ்வு கண்டு மகிழ்ந்தார். மருமகள் சிவநயனி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் பாடசாலைக்கல்வியை நிறைவுசெய்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் பிராந்திய திட்டமிடல் மற்றும் சமுதாய அபிவிருத்தியில் சிறப்புப் பட்டத்தைப் பெற்று பதிவாளர் நாயகம் திணைக்களத்தில், மாவட்ட காணிப்பதிவகம் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுகின்றார். மகனின் இல்லற வாழ்வின் வழி குஹப்பிரணவி எனும் பெண்குழந்தையை 2015ஆம் ஆண்டு பேர்த்தியாகப் பெற்று அமரர் அவர்கள் நிறைவடைந்தார்.

மகள் லாவண்யா திருமண வயதை எட்டியதும் அவருக்கு அளவெட்டியைச் சேர்ந்த அமரர்கள் குலசிங்கம் வசந்தாதேவி தம்பதிகளின் இளைய புதல்வர் திலீபன் அவர்களை வாழ்க்கைத் துணையாக நிர்ணயித்து 2014ஆம் ஆண்டு திருமணபந்தத்தில் இணைத்து வைத்தார். மருமகன் திலீபன் இலங்கை உயர்தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்கியலில் உயர்தேசிய டிப்ளோமாவைப் பெற்று தற்போது வலி தென்மேற்குப் பிரதேச சபையில் பணியாற்றி வருகின்றார். மகளின் வழி கஜசங்கவி மற்றும் ஹர்ணிகா எனும் இரு பெண் குழந்தைகளைப் பேரப்பிள்ளைகளாக பெற்று தனது இறுதிக்காலம் வரை அவர்கள் மழலைப் பருவத்தை இரசித்து மகிழ்ந்திருந்தார்.

தனது சொந்தங்களையும் சுற்றத்தவர்களையும் மிகவும் நேசித்த அமரர், அவர்களின் சுகதுக்கங்களில் முதல்ஆளாக பங்குகொள்ப வராகவும் இருந்தார். வெளியூரில் பணியாற்றிய காலங்களில் ஊருக்கு திரும்பும் போது தனது மருமக்கள், பெறாமக்களுக்கு அவர்கள் விரும்பும் பரிசுப்பொருட்களை வாங்கி வந்து கொடுத்து அவர்கள்

மகிழ்ச்சியில் இன்புற்றார். அளவெட்டியில் திருமணமாகி நிலையாக குடியேறிய போதும் தனது பூர்விகக் கிராமமான இணுவிலையும் தனது உறவுகளையும் மிகவும் ஆழமாக நேசித்தார். வாரம்தோறும் தவறாது தனது சகோதரிகளையும் தாயையும் தரிசித்த அவர் நேரம் கிடைக்கும் போதெல்லாம் தனது ஒன்றுவிட்ட சகோதர்களையும் மைத்துனர்களையும் நண்பர்களையும் சென்று கண்டு அவர்களது சுகநலன் விசாரிப்பதுடன் தனது பிள்ளைகளுக்கும் உறவுகளை அறிமுகம் செய்து வைத்து அவர்களும் இன்றளவும் அதனைப் பேண வழிகாட்டினார்.

ஆன்மீக நாட்டம் கொண்ட இவர் சிவதீட்சை பெற்று தனது பரம்பரை வழி இணுவில் சிவகாமி அம்மன் ஆலய நவராத்திரிபூசையின், சரஸ்வதி பூசையின் முதலாம் நாள் (நவராத்திரி ஏழாம் நாள்) உபயகாராக தனது எண்பத்தைந்து வயது வரை தர்ப்பை அணிந்து இறைபணியாற்றினார். தனது பிள்ளைகளையும் அதன் வழி ஆற்றுப் படுத்தினார்.

தனது எண்பத்தைந்து அகவை வரை துவிச்சக்கரவண்டியில் பயணிக்கும் உடல் ஆரோக்கியத்துடன் திகழ்ந்த அமரர் உள ஆரோக்கியத்துக்காக தினமும் அதிகாலை 4 மணிக்கு நித்திரைவிட்டு எழும்புவதுடன் இறைவழிபாடு அதன் பின்னர் யோகாசனப் பயிற்சி மற்றும் மூச்சுப் பயிற்சி என்பவற்றை மேற்கொள்ளும் வழக்கத்தையும் கொண்டிருந்தார். இவ்வாறு ஒரு நாள் அதிகாலை எழுந்து சாமியறையில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வேளை நிலைதவறி தடக்கி வீழ்ந்தமையால் அவரது இடது தொடை எலும்பு முறிவடைந்தது. பின் சத்திரசிகிச்சை மூலம் செயற்கையான உருக்கிரும்பு மூலமான என்புத்துணைகருவி பூட்டப்பட்டபோதும் முன்னர் போல அவரால் இயல்பாக நடமாட இயலாது போனது. இது அவருக்கு சற்று உளச்சோர்வைக் கொடுத்தது. அதன் பின்னர் மனைவி மகளின் பராமரிப்பில் வீட்டுக்குள் தனது பொழுதைக் கழித்தார். அப்போதும் கூட அவர்களுக்கு எந்தவித சிரமத்தையும் கொடுக்காது பூரண ஒத்துழைப்பை வழங்கியதுடன் தன்னைப் பார்க்க வரும் உறவினர்களையும் பரிவுடனும் பாசத்துடனும் அணுகினார்.

இவ்வாறு இருந்த பொழுதில் வயோதிப மூப்பின் காரணமாக 05.11.2025 புதன்கிழமை அன்று சிவனுக்கு அன்ன அபிசேகம் நிகழும்

ஐப்பசி மாதப் பரணி நட்சத்திரத்தில் பூரணைத் திதியில் மதியம் 12 மணிப்பொழுதில் சோவென மழைபொழியும் தருணத்தில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைகழல் ஏகினார். அமரரது விருப்பின் பிரகாரம் அவரது பூதவுடல் அவரது பூர்வீக மண்ணான இணுவில் கிராமத்தில் ஈழத்துச் சித்தர்கள் பலரது பாதம் பதிந்த புண்ணிய தலமான இணுவில் காரைக்கால் சிவன் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள காரைக்கால் இந்து மயானத்தில் 06.11.2025 வியாழக்கிழமை தகனம் செய்யப்பட்டது. அமரரது அஸ்தி 07.11.2025 வெள்ளிக்கிழமை வானம் சாரலாய் நீர்தெளிக்க கீரிமலைப் புனிததீர்த்தக்கரையில் கரைக்கப்பட்டது.

ஆயிரம் பிறைகண்ட அமரரது வாழ்வு நிறைவுபெற்று அமரது ஆத்மா அவரது குலதெய்வமான இணுவில் சிவகாமி அம்பாளினதும் அவர் தினமும் வழிபடும் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் மற்றும் தவளக்கிரி முத்துமாரி அம்மனினதும், அமரரது நெஞ்சுக்கு நெருக்கமான செல்வச்சந்நிதியானினதும் பெருமதுணையுடன் நித்திய சாந்தியடைந்து இறைநிழலில் அமைதி பெறப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**“ஒரு தந்தை என்பவன், தன் குழந்தைகளுக்குத் தேவையானதை வழங்குபவன் அல்ல் அவர்களுக்குத் தேவைப்படாதபோதுகூட, எல்லாவற்றையும் கொடுத்து, அவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்பவன்.**

A father is not one who provides what his children need; he is one who gives everything, even when they don't need it, and lives as their role model.”

# அன்பிற்கினிய ஆசிரியராயும் அடியவராயும் அமைந்தவர்

அமரர் சி.இரத்தினசிங்கம் அவர்கள் எனக்கு இருவகையில் அறிமுகமானவர். எனது பாடசாலை நாள்களில் அருணோதயக் கல்லூரியின் ஆசிரியராக அவரை அறிவேன். எனது சகோதர்கள் அவர்களிடம் படித்தவர்கள். எனது தந்தையாரின் சகோதரிகள் அவருடன் சமகாலத்தில் ஆசிரியர்களாகப் பணியாற்றிய வர்கள். அத்துடன் எமது ஆலயத்தின் அணுக்கமான பத்தராகவும் அவரை அறிந்திருக்கிறேன். அவரது குடும்பத்துக்கும் எங்கள் அளவெட்டி கும்பராவளை பிள்ளையார் ஆலயத்துக்கும் மிகவும் நெருக்கமான உறவுண்டு. ஆலயத்தின் எட்டாம் திருவிழா உபயம் அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களுடையது.

அதுமட்டுமன்றி அமரர் அவர்களின் குடும்பம் எங்கள் மூதாதையர் காலம் தொட்டு எமது அந்தணக் குடும்பங்களுடன் நெருக்கமான தொடர்பைப் வைத்திருந்தவர்கள். அவர்களது குடும்பங்களின் மங்கல காரியங்கள் தொடக்கம் பிதிர்க்கடமைகள் வரை அவற்றை நிறைவேற்ற எமது குடும்பத்தினரை அவர்கள் நாடுவதுண்டு.

அமரர் இரத்தினசிங்கம் ஆசிரியரை தினமும் காலை வேளைப் பூசையில் எமது கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் காணலாம். மிகவும் பணிவுடன் ஆன்மீக ஈடுபாட்டைக் காண்பித்தவர் அவர். புன்முறுவல் பூத்த வதனம், உழைப்பால் உரமேறிய தேகம் என அவரது தோற்றம் என்றும் நினைவில் இருப்பது. எனது தந்தையாரின் நெருக்கமான நண்பராகவும் அவர் இருந்தார்.

அவர் இன்று இயற்கை எய்தியிருக்கிறார். அது இயல்பான உலக நியதி எனினும் சார்ந்திருந்த அத்தனை பேருக்கும் பெரும் துயரமே. அவர்களது துயரம் நீங்கி ஆறுதல் அடையவும் அவரது ஆத்மா எல்லாம்வல்ல கும்பழாவளைப் பிள்ளையார் பாதங்களில் சாந்திபெறவும் பிராத்தித்து ஆசிர்வதிக்கிறேன்.

**பிரம்மஸ்ரீ சோ.குமாரதாசக் குருக்கள்**
பிரதம குரு,
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்.

# பத்திநெறி மிக்க பண்பாளன்

அமரர் சின்னத்துரை இரத்தினசிங்கம் அவர்களை நீண்ட காலமாக நன்கு அறிவேன். இணுவில் சிவகாமி அம்மன் கோவிலின் அருகில் வசிக்கும் அவரது குடும்பத்தினர் எமது ஆலயத் துடன் மிகவும் நெருக்கமானவர்கள். தங்கள் குலதெய்வமாக சிவகாமி அம்மனைச் சிந்தையில் இருத்தி தங்கள் செயல்களை முன்னெடுப்பவர் கள். அமரர் இரத்தினசிங்கம் அவர்கள் எமது ஆலயத்தின் உபயகாரராக நவராத்திரி பூசையின் சரஸ்வதி பூசை ஆரம்பநாளை நீண்ட காலமாக செய்துவருபவர். நவராத்திரி தினங்களில் எனது வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்ட இசைக்கச்சேரிகளுக்கு என்றும் தனது ஆதரவை நல்கியவர்.

ஒரு ஆசிரியராக சமயக் கோட்பாடுகள் தொடர்பில் ஆழமான பற்றுறுதி கொண்டவர். அந்தணப் பெருமக்கள் மீது அளவுகடந்த மதிப்பும் மரியாதையும் மிக்கவர். அவர்களின் சொல்லைத் தலைமேல் கொண்டு கருமமாற்றும் அவரது பணிவு என்றும் மறக்கற்பாலது. தனது தாய் தந்தையர் மறைவின் போது சமய நம்பிக்கைகளை முழுமையாக அனுசரித்து எமது வழிகாட்டலில் அவர்களது ஆத்ம ஈடேற்ற காரியங்களை தனது இயலுமை உள்ளவரை நிறைவேற்றி வந்தவர்.

அளவெட்டியில் குடியமர்ந்த போதும் இணுவில் கிராமத்தின் மீது கொண்டிருந்த ஈர்ப்பையும் பற்றையும் அவர் இழந்ததில்லை. அம்பாளின் அனேகமான விசேட நிகழ்வுகளில் அவர் கலந்துகொள்ளத் தவறுவதில்லை. சற்று உடல்நிலை தளர்ந்திருந்த போதும் கூட அம்பாளின் இரதோற்சவ நிகழ்வில் அவர் கலந்து கொண்டமை நினைவிருக்கிறது.

நல்லதொரு பண்பாளன், பழகுவதற்கு இனியவர், அம்பாளின் மீளா அடியவர் இன்று இவ்வுலக வாழ்வை நீத்து அம்பாளின் பாதக்கமலங்களில் சரண்புகுந்தார். அவரது ஆத்மா எல்லாம் வல்ல இணுவைச் சிவகாமித் தாயின் பாதங்களில் ஆத்ம ஈடேற்றம் பெற பிரார்த்தித்து அவரது நிறைவுற்ற வாழ்வை ஆசிர்வதிக்கிறேன்.

**பிரம்மஸ்ரீ.சி.சோமசபேசக் குருக்கள்**
பிரதமகுரு,
இணுவில் சிவகாமி அம்மன் தேவஸ்தானம்.

# துணைவியாரின் துயரம்

என் வாழ்வின் அனைத்துமாக நீங்கள் இருந்தீர்கள். பாசம், பரிவு, அக்கறை, நேயத்துடன் என்னைத் தாங்கியிருந்த பொழுதுகள் மறக்க முடியாது. எங்கள் பிள்ளைகளின் நலனுக்காக நீங்கள் செய்த அர்ப்பணிப்புக்கள் மறக்கற்பாலவை. அவர்கள் நீங்கள் எண்ணியபடி உயர்வடைந்த பொழுதுகளில் எல்லாம் ஆனந்தக் கண்ணீர் தழும்ப நெகிழ்ந்திருந்தீர்கள்.

தங்கள் வாழ்வில் நோயுற்று பாயில் படுக்கையில் நீங்கள் வீழ்ந்தறியேன். திடகாத்திரத்துடன் இருந்த உங்கள் ஆரோக்கியத்தினால் வயதடைந்த பொழுதுகளில் கூட எங்களுக்கு அன்றாடக் கருமங்களில் பெரும் துணைசெய்தீர்கள். உடல் ஆரோக்கியத்திலும் நல்ல உணவுப் பழக்கவழக்கங்களிலும் நீங்கள் எடுக்கும் அக்கறை எங்கள் வாழ்விலும் பயன்களைத் தந்தனவே.

தற்செயலாக நடைபெற்ற அனர்த்தத்தில் தங்கள் கால் முறிந்து நகர முடியாது போன போது உங்களைத் தாங்கிப் பராமரிக்கும் பாக்கியம் பெற்றேன். அப்போது கூட எந்தவித வெறுப்பான வார்த்தைகளையும் தாங்கள் உதிர்த்ததில்லை. என் நலனில் அக்கறையுடன் ஆலோசனைகள் சொன்னீர்கள்.

எங்கள் வாழ்வில் சந்தித்த நெருக்கடிகளின் போது அவற்றைத் தாண்ட தங்களை அர்ப்பணித்து நின்றீர்கள். இடம்பெயர்ந்து ஊர் ஊராக அலைந்த போதும் எவரிடமும் நாங்கள் தங்கி வாழக்கூடாது என்பதில் அதிக கவனத்துடன் இருந்தீர்கள்.

சாவகச்சேரியில் தங்கியிருந்த சில மாதங்களுக்குள்ளேயே உறவுகளின் காணியில் தனியாக குடிசை அமைத்துக் குடியேறினோம். பாடசாலை ஆசிரியப் பணியுடன் விவசாயமும் செய்து எங்கள் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க அயராது உழைத்தீர்கள்.

பிள்ளைகளினது வாழ்வின் சிறப்பும் பேரப்பிள்ளைகளின் மழலை மொழிகளும் உங்களை மகிழ்விக்கும் தருணங்களை என்னுடன் நிறைவாகப் பரிமாறி மகிழ்ந்தீர்கள். இறுதிக் காலத்தில் சில நாள்கள்

ஒரு குழந்தையைப் போல தங்களைப் பராமரிக்கும் பெரும் வாய்ப்புப் பெற்றேன். இது இறைசெயல் என்றெண்ணி நிறைவடைகிறேன்.

நீங்கள் இல்லாத இனிவரும் பொழுதுகளில் ஒரு வெறுமையை உணர்கிறேன். உங்கள் ஆத்மா இறையடியேகவும் எங்களை ஆசிர் வதிக்கவும் கும்பழாவளையானைப் பிரார்த்திக்கின்றேன்.

பிரியமுடன்
**தெய்வநாயகி**

CEYLON

கமத்தொழிற் சாதன பாடசாலை

கிளிநொச்சி

சி. இரத்தினசிங்கம்

அவர்கள் இச்சான்றிதழுக்குரிய திட்ட அத்திய யனக்கிரமத்தை 1959ம் ஆண்டில் முடித்துக்கொண்டு இறுதிப் பரீட்சையில் மேல் வரும் பாடங்களில் மூன்றாம் பிரிவில் சித்தியெய்தி யுள்ளார் என்பது இத்தால் உறுதிப்படுத்தப்படுகின்றது :—

1. பயிர்ச்செய்கை
2. கால்நடை வளர்ப்பு
3. தோட்டக்கலை
4. பயிர்ப்பீடையும் சிற்றுயிர்களும்
5. கம இயந்திரப் பிரயோகம்
6. கூட்டுறவு

திகதி : 17.12.59.

பாடசாலை அதிபர்.

கமத்தொழில் அதிபதி.

J. N. R 1729—1,000 (5/59) அரசாங்க அச்சகம், இலங்கை.

உ

# அப்பா - நினைவலைகளில் மோதும் அழியா அனுபவங்கள்

அப்பா... இந்த வார்த்தையை உச்சரிக்கும் போதும் செவிகளில் உள்வாங்கும் போதும் "ஞாபகக்கிடங்கிலிருந்து" மேற்கிளம்பும் நினைவுகளும் மீள் அனுபவத்தரிசிப்புக்களும் ஓராயிரம். பாலகப் பருவத்தில் தந்த கனிவு நிறைந்த பரிவு, கட்டிளமைப்பருவத்தில் கண்காணிப்புடன் கூடிய கண்டிப்பு, அது தாண்டியதும் தம்பி சொன்னாச் சரி அவன் சரியாத்தான் செய்வான் எனும் தன்னளவிலான தீர்மானத்துடன் கூடிய தன்னம்பிக்கையைத் தந்த ஊக்கம், எனக்கொரு குடும்பம் மனைவி மற்றும் பிள்ளை என்றானவுடன் அவரவர் வாழ்க்கை அவரவர் விருப்பு, வெறுப்பு அவரவர் தீர்மானம், எனும் நிலையில் தனிமனித சுதந்திரத்துக்கு மதிப்புக்கொடுத்து சற்று தொலைவிலிருந்து நோக்கி நெகிழும் நெஞ்சம் என அப்பாவின் இயல்புகளும் எம்மை நேர்செய்த குடும்பத்தலைமைத்துவப் பாங்குகளும் என்றும் அழியா நினைவுகள்.

அப்பா தொழில் சார்ந்து ஒரு ஆசிரியர். தனது கடமையைச் சீராகச் செய்தார் எனும் திருப்தி என்றும் அவருக்குளது. அதனால் தன் ஓய்வூதியத்தை 27 வருடங்கள் அனுபவிக்கும் வாய்ப்பை இறைவன் அவருக்கு கொடுத்தான். அப்பாவின் ஆசிரிய வாழ்க்கையும் எனது ஆரம்ப கட்ட வாழ்க்கையும் சமாந்தரமாகப் பயணித்தவை. தான் கற்பிக்கும் பாடசாலைகளுக்கு என்னையும் இணைப்புச் செய்யும் ஆரம்ப கால அவரது தீர்மானங்கள் எனக்குள் பல நன்மைகளை விளைவித்தது.

அப்பா பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்பித்த போது நான் எனது கல்வி வாழ்க்கையை ஆரம்பித்தேன். அங்கு இயங்கிய முன்பள்ளியில் என்னைச் சேர்த்தார். ஒரு வாரம் மட்டுமே என்னால் அங்கு இயைந்து போக முடிந்தது. ஆசிரியர் என்றால் சேலை அணிபவர் என ஆணித்தரமாக மனதில் ஆழப்பதிந்த விம்பத்துக்கு சட்டை அணிந்த முன்பள்ளி ஆசிரியர் விதிவிலக்காகத் தெரிந்தார். முதல் நாளே அப்பாவிடம் முறைப்பாடு

செய்தேன். நாளை சேலை அணிவார் என நான்கு நாள்கள் கடக்க ஐந்தாம் நாள் அங்கு கற்க மாட்டேன் என அடம்பிடித்தேன். அப்பா எனது முடிவுக்கு உத்தியோகபூர்வமாக சம்மதம் தெரிவித்து, தனது விருப்பைத் தள்ளி வைக்க ஆரம்பித்த முதல்நிகழ்வாக அதுவிருக்கும் என நம்புகிறேன். அதற்குப் பின் அவரது இந்த இயல்பு எனது பாடசாலைத் தெரிவுகள், உயர்தரக்கற்கைத் தெரிவு, பல்கலைக்கழகக் கற்கைத் தெரிவு, தொழில் தெரிவு. வாழ்க்கைத்துணையின் தெரிவு என அனைத்திலும் பிரதிபலித்தது.

முன்பள்ளியை எனது விருப்பில் நிறைவு செய்ததும் அப்பாவின் விருப்புக்கு மதிப்பளிக்கும் நோக்கில் நான் மீண்டும் பெரியவிளான் றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலையில் கல்வி கற்க இணங்கினேன். நான் பாடசாலையில் சேர்ந்த பொழுதில் ஒரு பாடசாலை மேசையும் கதிரையும் எனது பெயரில் பாடசாலைக்கு அப்பா செய்து கொடுத்தார். அந்தக் கதிரை மேசையில் தான் நான் இருந்து கற்றேனா என்பது ஞாபம் இல்லை. எனக்குப் பாடசாலை சற்று முன்னதாக நிறைவுபெறும். அப்பாவுக்கு பாடசாலை முடியும் வரை பாடசாலை வளாகத்துக்குள் அமைந்திருந்த தேவாலயத்திலேயே எனது பொழுது கழியும். அவ்வப்போது, வேண்டாம் என நான் மறுத்த முன் பள்ளி ஆசிரியை என்னைப் பரிவுடனும் புன்முறுவலுடனும் நோக்கு வார், நலம் விசாரிப்பார். ஒரு நாள் கூட முன்பள்ளியை இடைநிறுத் தியதற்கான காரணம் குறித்து என்னிடம் விசாரணை செய்ததில்லை. அப்பா அந்த ஆசிரியையின் தனிமனித சுதந்திரத்துக்கு மதிப்பளித்து எனது சட்டைபோட்ட ரீச்சர் மறுப்பு விவகாரத்தை அவரிடம் சொல்லா திருந்திருக்கிறார் என்பதை இன்று உணர்ந்து நெகிழ்கிறேன். தேவால யத்தில் கழியும் இருமணித்தியாலங்களும் சிலுவையிலிருக்கும் இயேசு பிரானின் கருணை முகத்தை பார்ப்பதுடனும் தேவாலய விறாந்தை தூண்களைச் சுற்றி சுற்றி அவற்றை எண்ணுவதிலும் எனது பொழுது கழியும்.

அப்பாவுக்குப் பின்னர், அருணோதயக் கல்லூரிக்கு மாற்றம் கிடைத்தது. நானும் பாடசாலை மாற்றப்பட்டேன். எனது வகுப்புக்கு பக்கத்து வகுப்புக்கு அப்பா வகுப்பாசிரியர். அவரது தண்டிப்பு நிறைந்த கண்டிப்பு அவரது அடையாளம். வீட்டில் நான் காணும் அப்பாவைவிட பாடசாலையில் காணும் இரத்தினசிங்கம் மாஸ்டர் வித்தியாசமாகவே

தெரிந்த நாள்கள் அவை. அப்பாவை பள்ளிக்கூடத்தில் சேர் என்று தான் அழைக்கவேண்டும் என அம்மா என்னைப் பயிற்றுவித்த நாள்களும் அவை.

அப்பாவுக்கு அவரது ஆரம்பப்பிரிவு மாணவர்கள் வைத்த பட்டப் பெயர் “பொட்டு வாத்தியார்”. அது பின்னர் பரவலான காரணப்பெயராக மாறியது. அவரது நெற்றியில் என்றும் இருக்கும் சந்தனப்பொட்டே அவரது அடையாளமாக அவரது மாணவர்களால் சூட்டப்பட்டது. அப்பா எப்போதும் வேட்டிதான் அணிவார். அதுவும் அவரது தனித்துவங்களில் ஒன்று. எத்தனையோ தடவைகள் நீளக்காற்சட்டைக்கு மாறும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட போதும் அவர் மாறவேயில்லை. தனது வாழ்நாள் முழுவதும் வேட்டி அணிவதையே அவர் வழக்கமாக்கியிருந்தார்.

அப்பாவின் ஒரு நாள் பொழுது என்பது அதிகாலை நான்கு மணிக்கு ஆரம்பமாகும். நான்கு மணிக்கு துயில் எழும்பும் அவர் காலைக் கடன்களை முடித்துவிட்டு வீட்டிலுள்ள பூ மரங்களில் உள்ள பூக்களைப் பறித்து சாமித்தட்டில் உள்ள சாமிப்படங்களுக்கு வைத்து வழிபட்டு மூச்சுப்பயிற்சி மற்றும் யோகாசனம் என்பவற்வைச் செய்வார். இந்த வழக்கம் அவர் முற்றுமுழுதாகத் தானாக இயங்கிய அவரது எண் பத்தைந்து வயது வரை தொடர்ந்தது. அதிகாலையில் துயில் எழுவதும் இறைவழிபாடும் அவர் அப்பப்பாவிடம் கற்றுக்கொண்ட வாழ்க்கைப் பாடம் என நினைக்கிறேன். அதனை அப்பா எனக்கும் கற்றுத் தந்தார். நானும் இன்றளவும் அதனை இயன்றளவும் பின்பற்றுகிறேன்.

அப்பா ஆசிரியத்தொழிலுடன் விவசாயத்தையும் ஒரு முழுநேர விவசாயி போலச் செய்தவர். அவரது ஆரம்பக் கற்கைகள் விவசாயத் துறை சார்ந்தே இருந்தன. முழுநேர விவசாயிக்குரிய வேலைகள் இருந்தபோதும் அதற்குரிய நேரம் அவருக்கு ஆசிரியத் தொழில் காரணமாகக் கிடைக்கவில்லை. அதனால் அதிகாலை வேளைகளை யும் பாடசாலை முடிந்தபின்னான மாலைப் பொழுதுகளையும் அதிகம் விவசாய நடவடிக்கைகளுக்கு செலவழிக்க வேண்டியிருந்தமையால் நாள் முழுவதும் உழைக்கும் பழக்கம் அல்லது கட்டாயம் அப்பாவுக்கு இருந்தது.

காலையில் மரவள்ளி இழுப்பு அவருக்கு வருடத்தில் பாதிநாள்கள் இருந்தன. தனியாக கட்டைபோட்டு மரவள்ளி இழுப்பது அவரால் இயலக்கூடியதாகவிருந்தது. உதவியாளர்களும், பாடசாலைக்

கல்வியை நிறைவுசெய்த பின்னர் நானும் அவ்வப்போது அப்பாவுக்கு உதவியதுண்டு. இருந்தும் தனியாகவே பல நாள்கள் இயங்கினார். அவருக்கு குடலிறக்க நோய் ஏற்பட்டமைக்கு மரவள்ளி இழுப்பும் ஒரு காரணமாகவிருக்கலாம். பெரும்பாலும் சங்கானைச் சந்தை அவரது வாடிக்கையான இடம். வார இறுதி நாள்களில் சில வேளைகளில் சுன்னாகம், மருதனார்மடம் சந்தை. அதற்கு ஒரு காரணமிருந்தது. தனது தாயாரின் மீது அளவுகடந்த பாசம் கொண்டிருந்த அவர் வார இறுதிநாள்களில் இணுவிலுக்கு போவதை வாடிக்கையாக்கியிருந்தமையால் சுன்னாகம் அல்லது மருதனார்மடச் சந்தைக்கு போவதைத் தெரிவுசெய்தார். அப்பா எப்போது சந்தையால் திரும்புவார் என வாசல் பார்த்திருக்கும் பழக்கம் பல்கலைக்கழக மாண வனாயிருந்த பருவம் வரை தொடர்ந்தது. காரணம் அப்பா சந்தையால் வரும்போது வடை, சூசியம் என்பவற்றுடன் வருவார். இன்றும் அப்பா வாங்கிவரும் சூசியத்தின் இனிப்பை நினைக்க நாவு இனிக்கின்றது.

அறுபது வயது கடந்த போதும் வாரத்தில் ஒரு நாள் அப்பம்மாவின் கைகளால் போடப்படும் தேநீரை அருந்தாவிட்டால் அப்பாவுக்கு உளச்சோர்வு வந்துவிடும். அப்பம்மாவுக்கும் அந்த பாசவியாதி இருந்தது. எனது பாடசாலைப்பருவத்தை நான் இணுவிலிலேயே கழித்தேன். அப்பா வார இறுதியில் வர தாமதமாகினாலோ அல்லது ஏதேனும் காரணத்தால் தவறினாலோ அப்பம்மாவுக்கு பதட்டம் வந்துவிடும். “எங்க இந்தப் பெடியை இன்னும் காணேலை” என புலம்ப ஆரம்பித்துவிடுவார். அப்பாவை அவரது அறுபது தாண்டிய வயதிலும் தனது எண்பது தாண்டிய வயதிலும் “பெடி” என அப்பம்மா அழைக்கும் ஒலி அதே சுரத்துடன் இதை எழுதும் போது காதில் தேனாக இனிக்கிறது. அப்பம்மாவின் தேநீர் அப்பாவுக்கு ஒரு உள ஊக்க மருந்து என்பதை இன்று உளவியல் கற்றபின்னர் உணர முடிகின்றது.

அப்பம்மாவுக்கு இயலாமல் போன பின்னரும் அவர் மறைந்த பின்னரும் அந்த தேநீர் வாடிக்கையை தனது இளைய சகோதரி ராணி அத்தையுடன் தொடர்ந்தார். இணுவிலுக்கு போகும் வேளைகளில் தனது சகோதரிகள் மூவரையும் சந்திக்க அவர் தவறுவதேயில்லை. குடும்பத்தின் மூத்த பிள்ளை என்பதால் தனக்கு இருக்கும் ஒரு பொறுப்பாக அப்பா அதனைக் கருதினார். இது அவர் இல்லாத பொழுதுகளில் நமக்கு பல செய்திகளைச் சொல்கின்றது.

அப்பா எப்படி தனது சகோதரர்களை நேசித்தாரோ அவ்வாறே தனது உறவினர் நண்பர்கள் அனைவரையும் நேசித்தார். உறவுகள் வீட்டில் நடைபெறும் சுகதுக்கங்கள் அனைத்துக்கும் முதல் ஆளாக அப்பா நிற்பார். திருமண நிகழ்வெனில் பால் அறுகு வைக்கும் போதே அப்பா பிரசன்னமாகிவிடுவார். வீடுதேடிவரும் அழைப்புகளுக்கு அவர் அத்துணை மரியாதை கொடுத்தார். தனது இந்தப் பழக்கத்தை எமக்கும் கற்றுத்தர முயற்சித்தார். அவ்வப்போது தனது நெருங்கிய உறவினர்கள் வீடுகளுக்கு என்னையும் தங்கையையும் அழைத்துச் செல்வார். தவிர்க்க இயலாத, கட்டாய காரணங்கள் எதுவுமற்ற இயல்பான உறவுத்தரிசிப்புக்களாகவே அவை அமைந்திருந்தன. இன்று இந்தப் பழக்கம் நம்மில் பலருக்கு அற்றுப் போய்விட்டது. "எல்லாம் புதினமாப் போச்சு, அவரவர் போனபோனபாடும் வந்த வந்த பாடும்" என அப்பம்மா அடிக்கடி சொல்லும் வார்த்தைகளால் இன்று நம் வாழ்வு கட்டுப்பட்டுக்கிடக்கின்றது. அப்பா அழைத்துச் சென்று காண்பிக்கும் உறவினர்களை அவர்களது உறவுமுறை சார்ந்து நமக்கு அறிமுகப்படுத்துவார். சிறுபிள்ளைகள் நமக்கு அவை நினைவிருக்காமையால் நாம் உறவுகளுக்கு காரணப்பெயர் வைப்போம். "கண்டோஸ் மாமி, புளியடி மாமி, கண்ணாடி மாமா, வெள்ளைச் சித்தப்பா, மீசைக்கார பெரியப்பா, காவடிப் பெரியப்பா..." என இப் பட்டியல் நீண்டது.

என்னிடம் நான் சுயவிழிப்பால் உணரும் என் திறன்களுள் முதன்மையானதாகக் கருதும் சமூகத்திறன்களின் வல்லமை அப்பா எனக்கு தந்த பெரும் பரிசு. இன்றளவும் உறவுகளை நெருக்கமாக்கிக் கொள்வதிலும் இடையறாது பேணுவதிலும் கரிசனையுடன் உள்ள மைக்கு சிறுவயதில் அப்பா கற்றுத்தந்த உறவுகளுடான பிணைப்பு அடித்தளமாகின்றது. அப்பா இயலாது வீட்டுக்குள் அடங்கிய பின்னர் எனது இந்த இயல்பை நான் கட்டாய பொறுப்பாக்கிக் கொள்ளத் தொடங்கினேன். எங்கள் உறவுகளின் சுகதுக்கங்களில் அப்பாவைப் போல் முதல் ஆளாகப் போக முடியாவிட்டாலும் தவறாது போக வேண்டும் எனும் இயல்பு எமக்குள் தோற்றுவிக்கப்பட்டுவிட்டது.

எனது தனித்துவ ஆற்றலை அப்பா சிறுவயதிலேயே அடையாளப் படுத்தினார். இசைத்துறையில் நாட்டமுடைய அவர் என்னை இசை பயிற்றுவிக்க விரும்பி சங்கீதபூசணம் வி.கே.நடராஜா மாஸ்ரரின்

பண்ணிசை வகுப்புக்களில் இணைத்துவிட்டார். எனக்கும் இசைக்கும் சுருதி சேரவில்லை. தாளம் தப்பியது. அவ்வப்போது வி.கே. மாஸ்ரர் எனது தலையில் தாளம் போட்டார். கடைசியில் எனது இசைப்பயணம் இடைநடுவில் கைவிடப்பட்டது. ஆனாலும் அப்பா தனது தலைமுறையில் ஒருவரை இசைத்துறையில் முன்கொண்டுவரும் முயற்சியை கைவிடவில்லை. சின்னமாமியின் கடைசி மகன் எனது மச்சான் பார்த்தீபனுக்கு இசை பயிற்றுவிக்க எத்தனித்தார். அவனுக்கு சுருதியும் சுத்தமாக அமைந்தது. தாளமும் இம்மியும் பிசகாமல் வந்தது. இருந்தும் அவனது ஈர்ப்பு இயந்திரங்களின் மீதிருந்தது. அப்பாவின் முயற்சியும் விருப்பும் நிறைவேறாது போய்விட்டது.

எனது இயலுமை பேச்சுத்துறையில் இருந்தமையை இனங்கண்ட அப்பா பண்டிதர் இராசரத்தினம் அவர்களிடம் கொண்டுபோய் விட்டார். எமது வீட்டுக்கு சற்று தொலைவிலிருந்த பண்டிதரின் வீட்டுக்கு மாலைவேளைகளில் நான் போவேன். பண்டிதர் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் கற்பித்துக்கொண்டிருப்பார். என்னைக் கண்டதும் உற்சாகமாகக் வரவேற்று அந்த அண்ணாக்களுக்கும் அக்காக்களுக்கும் முன்னால் பேசச் சொல்லுவார். நான் பேசுவேன். நிறைவில் எல்லோரும் கைதட்டுவார்கள். பண்டிதர் அதிகம் திருத்தம் சொல்ல மாட்டார். நல்லாப் பேசுறாய் என தலையைத் தடவி அனுப்பி வைப்பார்.

இடப்பெயர்வுக்குப் பின், இணுவிலுக்கு வந்த பின்னர் எனது பேச்சுக் கலை தொடர்பில் பின்னூட்டம் வழங்கும் வழக்கத்தை அப்பாவே கொண்டிருந்தார். ஆனால் அவரிடம் ஒரு பழக்கம் இருந்தது. நான் பேசிக்கொண்டிருக்கும் போது எனது கண்களுக்குள் சிக்க மாட்டார். பேசி முடித்ததும் கூட அவரைக் காணக்கிடைக்காது. அவர் போய்விடுவார். வீட்டுக்கு வந்ததும் பின்னூட்டல் தருவார். அடிக்கடி அவர் தந்த பின்னூட்டம் "வாள் வாள் என உரத்துக் கத்தாமல் அமைதியாகப் பேசப்பழகு" என்பதாகும். அன்று பள்ளிப்பருவத்தில் எனக்கு பேச்சுக்கலையில் தொனிக்கட்டுப்பாடு குறித்த விழிப்பு இருக்கவில்லை. அப்பா எனக்குச் சொல்லிய பின்னூட்டலை இன்று பல இளையவர்களுக்கு நான் சொல்கிறேன். நான் இன்று இளையவர்களுக்கான பேச்சுக்கலை பயற்றுவிப்பில் ஈடுபட அப்பாவும் ஒரு காரணமாக பின்னிருக்கின்றார்.

அப்பா எனது கல்வியில் அழுத்தங்களை பிரயோகிக்காத அதீத அக்கறையை கொண்டிருந்தார். 1992ஆம் ஆண்டு நான் தரம் ஐந்து படித்துக்கொண்டிருந்தபோது புலமைப்பரிசில் பரீட்சைக்கு மூன்று தினங்கள் முன்னதாக எமது அளவெட்டிக் கிராமத்திலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர வேண்டியிருந்தது. இணுவிலுக்கு வந்து சேர்ந்தோம். இரண்டு தினங்களில் புலமைப் பரிசில் பரீட்சை. அப்பா ஆசிரியராக இருந்தமையால் தகவல் கிடைத்து சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் அமைக்கப் பெற்றிருந்த பரீட்சை நிலையத்துக்கு அழைத்துச் சென்று பரீட்சை எழுத வைத்தார். பெறுபேறுகள் வெளிவந்த நாளில் அப்பா பாட சாலையிலிருந்து திரும்பிவரும் வரை பெறுபேற்றினை அறியக் காத்திருக்கவேண்டியிருந்தது. இப்போது போல அப்போது இணைய வழியில் அறிய முடியாது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையால் தாயாரின் விருப்பில் நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சேர்க்கப்பட்டேன். அப்பா பாடசாலைத் தெரிவு தொடர்பில் முடிவெடுக்கும் முழு அதிகாரத்தையும் தாயாருக்கு கொடுத்திருந்தார். நான் 1993இல் ஆறாமாண்டு படிக்கும் போது அப்பாவின் பாடசாலை அருணோதயக் கல்லூரி மாலைநேரப் பாடசாலையாக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கியது. காலையில் என்னை தனது சைக்கிளில் ஏற்றி அப்பா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அழைத்துவருவார். பின் மதியம் அவர் பாடசாலை சென்றுவிடுவதால் பஸ்சில் அல்லது அண்ணைமாரின் சைக்கிளில் தொற்றி வீடு திரும்புவேன்.

கணிதபாடத்தில் எனக்கு ஆரம்பத்தில் புள்ளிகள் மிகக் குறைவாகவே யிருந்தன. அப்பா இது குறித்து கவலைப்பட்டார். அப்போது இணுவிலில் பிரபலமான தனியார் கல்வி நிறுவன ஆசிரியரான மகேந்திரம் மாஸ் டரை அணுகியபோது இடப்பற்றாக்குறை இருப்பதாகச் சொல்லப்பட்டது. அப்போது அப்பா, எங்களிடம் அம்மா அளவெட்டியிலிருந்த காலங்களில் கற்பிப்பதற்கு பயன்படுத்திய மேசை மற்றும் வாங்கினைக் கொடுத்து என்னைச் சேர்த்துவிட்டார். கணிதத்தில் நான் முன்னேற்றம் கண்டேன். அப்பா நான் கணிதத்துறை அல்லது கலைத்துறையில் உயர்தரம் கற்கவேண்டும் என விரும்பினார். ஆனால் நான் உயிரியல் துறையில் கற்றேன். அப்பா தனது விருப்பத்தை என் மீது திணிக்கவில்லை.

இவ்வாறே பின்நாள்களில் நான் இலங்கை நிர்வாக சேவைக்கு நியமிக்கப்பட்டபோது நடைதூரத்திலுள்ள பல்கலைக்கழக பணியா அல்லது நாடாளவிய நிலையிலான நிர்வாக சேவையா என முடிவெடுப்பதில் சிரமப்பட்டேன். அப்போது அப்பா, அம்மாவிடம் "இவனுக்கு நிர்வாக சேவை தான் சரி போகச் சொல்லு' எனச் சொன்னார். ஆனால் என்னிடம் நேரடியாக சொல்லி எனது முடிவெடுக்கும் உரிமையில் அவர் தலையீடு செய்ய விருப்பப்படவில்லை. இப்போது அடிக்கடி அப்பா அன்று அம்மாவிடம் சொன்ன "இவனுக்கு அதுதான் சரி" எனும் வார்த்தைகளின் ஆழத்தையும் அப்பா எனது ஆளுமையின் மீது கொண்டிருந்த கணிப்பையும் நினைந்து ஏங்குவதுண்டு.

உயர்தரக்கல்வி முடித்து பல்கலைக்கழகத்துக்கு காத்திருந்த பொழுதுகளில் அளவெட்டியிலிருந்தேன். எனக்கு அளவெட்டியில் அப்போது பெரிதாக நண்பர்கள் இருக்கவில்லை. வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் அளவெட்டி நூலகமே பெரும் துணையாகவிருந்தது. அப்போது ஒரு நாள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி ஐயா வந்து ஆலோசனைக்கூட்டம் நடத்தினார். அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு நூலகத் தரப்பால் தரப்பட்டது. நான் மக்கள் சார்பாக எமது கோரிக்கையை காரசாரமாக முன்வைத்தேன். கூட்டமைப்பு ஆதரவாளர்கள் என்பதால் மின்சாரம் வழங்கல் மற்றும் வீதிப் புனரமைப்பில் நாம் புறக்கணிக்கப்படுவது குறித்தும் அதுதொடர்பில் கூட்டமைப்பின் அக்கறையீனம் குறித்தும் கண்டனத்தை பதிவுசெய்தேன். அப்பாவின் வார்த்தைகளில் சொல்வதெனில் வாள் வாள் எனக் கத்தினேன். அப்பாவின் காதுகளுக்கு இதனை யாரோ கொடுத்துவிட்டார்கள். அப்பாவின் பிரதிபலிப்பு வேறாகவிருந்தது.

அடுத்த நாள் காலை எமது வீட்டின் பக்கப்படலையைத் திறந்து கொண்டு ஒருவர் உரத்த குரலில் அப்பாவை அழைத்தபடி வந்தார். அவரது குரல்கேட்டு வெளியே வந்த நான் அவரை வரவேற்று அப்பா தோட்டத்துக்கு போயிருப்பதாகச் சொன்னேன். வந்தவர் தான் அப்பாவிடம் வரவில்லையென்றும் என்னைத் தேடி வந்ததாகவும் சொன்னார். அப்பா தன்னை முதல் நாள் மாலை சந்தித்ததாகவும் நூலககூட்டத்தில் நடந்த விடயங்கள் குறித்துச் சொன்னதாகவும் என்னை வழிப்படுத்தும்படி தன்னைக் கேட்டுக்கொண்டதாகவும் சொன்னார்.

அப்பாவின் வேண்டுகோளைக் கேட்ட தான் என்னைப் போல ஒருவரையே தான் தேடி அலைவதாகச் சொன்னதாகவும் அப்பாவின் ஆலோசனையில் காலையில் என்னைச் சந்திக்கவந்ததாகவும் சொன்னார். அவர் தான் பின்னர் என் சமூக வாழ்வில் அதிக தாக்கமிக்க பாதையைத் தொடக்கிவிட்ட வையண்ணா பாலண்ணை.

பாலண்ணையும் அப்பாவும் ஒன்றாக சமகாலத்தில் விவசாயக் கல்லூரியில் படித்தவர்கள். அப்பாவின் நாட்டம் ஆசிரியத் தொழி லிலேயே இருந்தது. விவசாயத்துறை சார் அரசாங்கப் பணியை தெரிவுசெய்யவில்லை. அதற்கு பரமலிங்கம் பெரியப்பாவும் ஒரு காரணம். எட்டியாந்தோட்டையில் கடை வைத்திருந்த அவர் அங்குள்ள பாடசாலையில் கல்வி கற்பிப்பதற்காக அப்பாவை அழைத்திருந்தார். அப்பா ஆசிரியராக இணைந்தார். இருந்தும் பின்னர் தனது தம்பி குலசிங்கம் சித்தப்பாவை குண்டகசாலைக்கு அனுப்பி அவர் விவசாயப்பட்டப்படிப்பு படிக்க வழிகாட்டினார். இது ஓரு புறமிருக்க அப்பா அனுப்பி வைத்த பாலண்ணைக்கும் எனக்குமான உறவு அளவெட்டி மகாஜன சபை எனும் பெரு அமைப்பின் மீள்எழுச்சியிலும் அளவெட்டிக் கிராமத்தின் ஒரு முகமாக நான் அறியப்படவும் காரணமாக அமைந்தது. அன்று அப்பா தானாக எனது துடிப்பை அடக்கி அறிவுரை கூறியிருந்தால் நானும் அளவெட்டியும் அதிகம் இழந்திருப்போம். அப்பாவின் நுட்பம் வேறானதாகவிருந்தது. எனது இயல்புக்கும் இளமைத் துடிப்புக்கும் சரியான வழிகாட்டியாக தனது நண்பரை அறிமுகம் செய்து எனது துடிப்பை நேர்செய்தார்.

அதன் பின்னர் எனது பொழுதுதின் பெரும்பகுதி மகாஜன சபையிலேயே கழிந்தது. அங்கிருந்து வேறு சமூகத் தொடர்புகளும் வலுப்பெற்றன. குறிப்பாக சமாதான உடன்படிக்கை காலம் என்பதால் வேறு பல பணிகளிலும் ஈடுபட வாய்ப்புக்கிடைத்தது. அதனால் வீட்டில் இருப்பதை விட வெளியிலேயே அதிகம் நின்றேன். பூரண சுதந்திரத்தை அனுபவித்தேன். எனது மோட்டார் சைக்கிள் முள்ளியவளை, கனக ராயன்குளம், கிளிநொச்சியின் திருநகர், உள்ளிட்ட பல பகுதிகளுக்கும் ஓடித்திரிந்தது. வீட்டுக்கு வராமல் வெளியில் தங்கிய காலங்களும் இருந்தன. இருந்தும் அப்பா என்னை அதிகம் கண்டிக்கவில்லை. தான் வழங்கிய சுதந்திரத்தை நான் தவறாகப் பயன்படுத்த மாட்டேன் எனும் உயர்நம்பிக்கை அவரிடமிருந்தது. இன்றைய இளையவர்களின்

வாழ்கைச் சூழலை நினைக்கும் போது இவையெல்லாம் சாத்தியமா என்றே தோன்றுகின்றது.

அப்பா எம்மீது கொண்டிருந்த நம்பிக்கை மூலமும் தனது தீர்க்க தரிசனமான சிந்தனைகளுடன் தன் ஊக்கப்படுத்தும் நுட்பங்கள் மூலமும் நம் வாழ்வில் தாக்கம் செலுத்தினார். இதற்கு பல நினைவுகள் ஞாபகக்கிடங்கில் வந்து மோதுகின்றன.

புலமைப்பரிசில் பரீட்சை சித்தியடைந்தால் சைக்கிள் வாங்கித் தருவதாக அப்பா உறுதியளித்திருந்தார். இருப்பினும் அப்போது கடைகளில் புதுச் சைக்கிள்கள் இருப்பது குறைவு. எங்காவது பாவித்த சைக்கிளைத் தான் வாங்கவேண்டியிருந்தது. அப்பா எனக்கு தரமான சிறுவர்களுக்கான ஒரு சைக்கிளை வாங்கும் முயற்சியில் தீவிரமாகவிருந்தார். கும்பழாவளைப் பிரதமகுருவாகவிருந்த சோமசுந்தரேஸ்வரக்குருக்குள் (சுப்பையா) வீட்டில் ஒரு சைக்கிள் இருந்தது. அது கேபிள் பிறேக் பூட்டிய பச்சைநிற ஜப்பான் ஏசியா சைக்கிள். அதனை வாங்கத் தீர்மானித்து விலைபேசிவிட்டார் அப்பா. இருந்தும் எனது விருப்பம் அவருக்கு முதன்மையானதாகவிருந்தமையால் என்னை அழைத்துச் சென்று அந்தச் சைக்கிளைக் காண்பித்தார். எனது எதிர்பார்ப்பையும் தாண்டி அந்தச் சைக்கிள் எனக்கு திருப்தியாகவிருந்தது. காசை தயார்செய்து விட்டு வாங்குவதற்கிடையில் ஐயாவின் மகன் கிரிஜயாவின் முடிவால் சைக்கிளை விற்பதில்லை என முடிவாகியது. எனக்கு அந்தச் சைக்கிளை வாங்க முடியாது போன ஏமாற்றம் இன்றளவும் அகலாமல் இருக்கின்றது.

அப்பா எனக்காக சைக்கிள் தேடும் முயற்சியில் தீவிரமாக இருந்தார். கடைசியில் அளவெட்டி தெற்கில் பனை அபிவிருத்திச் சபையில் உத்தியோகத்தராகவிருந்த பாக்கியநாதன் ஐயாவிடம் இருந்த சைக்கிளை கண்டுபிடித்தார். அது நீலநிறத்தில் அமைந்த முக்கால் சைக்கிள். எனது பாடசாலை நிறத்துடன் ஒத்துப்போனமையால் அது எனக்குப் பிடிக்க அப்பா தனது முதல் அனுபவத்தின் அடிப்படையில் சைக்கிளைப் பார்த்த அன்றே அதனை வாங்கி என்னிடம் தந்து அளவெட்டி தெற்கிலிருந்து கந்தரோடை ஊடாக இணுவிலுக்கு சைக்கிள் ஓடவிட்டு பக்கத்தில் கவனத்துடன் வந்தார். எனது முதல் சொந்த சைக்கிள் சவாரியே பதினொரு வயதில் பத்து கிலோமீற்றரைத்

தாண்டியதாக அமைந்தது. அப்பா எனது வல்லமையில் வைத்த நம்பிக்கை பெரிது. பின்னர் காலையில் பாடசாலை செல்லும் போது பக்கத்தில் தானும் தனது சைக்கிளில் வந்து வீதி ஒழுங்குமுறைகளைச் சிலநாள் கற்பித்தார். அதன் பின்னர் நானும் எனது சைக்கிளும் ஊர்முழுதும் அலையும் சுதந்திரத்தையும் அப்பா தந்தார்.

க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்ததும் புதிய முழுச் சைக்கிள் வாங்கித்தந்தார். ஒரு நாள் விளையாட்டுத் திடலில் வைத்து புத்தம்புதிய சைக்கிள் களவாடப்பட்டது. அச்சத்துடன் வீடு திரும்பினேன். பயந்த மாதிரி எதுவும் நடக்கவில்லை. ஆனால் பின்னர் ஒரு பழைய சைக்கிள் வாங்கித்தரப்பட்டது. கடைசிவரை அதைக்கவனமாக வைத்திருந்தேன்.

பெரும் செலவில் சைக்கிள்கள் வாங்கித் தந்த அப்பா சிலசமயம் சிறுசிறு பொருட்களை நீண்ட இழுத்தடிப்பு அடம்பிடிப்புக்களுக்குப் பின்னரே வாங்கித்தருவார். அவ்வாறு வாங்கித்தந்த விடயங்களில் சதுரங்கப் பலகை, சைக்கிள் டைனமோ என்பன ஞாபகத்தில் நிற்கின்றன. எல்லாம் இலகுவில் கிடைத்துவிடாது என நான் அனுபவத்தில் உணர்ந்த நாள்கள் அவை.

அப்பாவுக்கு சைக்கிள் மிதிப்பதொன்றும் பெரிய காரியமல்ல. தவறி விழுந்து தொடை எலும்பு முறியும் முதல்நாள் தனது எண்பத்தைந்து வயதுவரை சைக்கிள் ஓடித்திரிந்த வல்லமையாளர் அவர். செல்வச்சந்நிதி கோவிலுக்கு அடிக்கடி சைக்கிளில் போவார்.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட காலப்பகுதிகளில் அப்பா புகையிலைச் செய்கையில் தனது தனித்துவத்தைக் காண்பித்தவர். புகையிலைக் கன்று நாற்றுக்களை வாங்குவதற்காக வடமராட்சி பொலிகண்டிக்கு சைக்கிளில் சென்று மூன்று நான்கு கடகங்களில் வாங்கிவருவார். மாலையில் நடுவதற்காக அதிகாலையில் போய் புகையிலைக் கன்றுகளை வாங்கிவருவதற்காக இருவழிப் பயணமாக அறுபது எழுபது கிலோமீற்றர் தூரம் சைக்கிள் மிதித்தவர் அப்பா.

வயதான காலத்திலும் இணுவிலுக்கு சைக்கிளில் போய் வந்தார். இளமையில் ஜப்பான் உற்பத்தியான சுப்பர்கப் மோட்டார் சைக்கிள் வைத்திருந்த போதும் இடப்பெயர்வுடன் பெற்றோல் தட்டுப்பாடு வர அதனை பத்தாயிரம் ரூபாவுக்கு விற்ற அப்பா, அதன் பின் மோட்டார் சைக்கிள் வாங்குவது தொடர்பில் அக்கறை காட்டவில்லை. நாங்கள்

சம்பாதிக்க தொடங்கிய பின்னர் வாங்கிக் கொடுக்க முயன்றபோதும் வேண்டாம் என்று விட்டார். எனக்கு மோட்டார் சைக்கிள் வாங்கும் போது, அப்பாவும் ஓடக்கூடியவகையிலான ஒன்றை வாங்க முயற் சித்தபோதும் அதனையும் மறுத்துவிட்டார். அப்பாவை உயிர்ப்புடன் வைத்திருந்தது அவரது மிதிவண்டிப் பயணங்களே. நான் எனக்கு ஒரு புதிய சைக்கிளை மகள் பிறந்த போது வாங்கினேன். பின்னர் பாவனையற்று இருந்த அதனை அப்பா பாவித்தார். இப்போது மீண்டும் அச்சைக்கிள் எனது பாவனையிலிருப்பது ஒரு உளத்திருப்தியைத் தருகின்றது.

அப்பாவின் சைக்கிள்பாவனைப் பழக்கமும் அவரது உடல் உழைப்பும் அவரது உடலை உறுதிசெய்திருந்தன. நான் உயர்கல் விக்காக அவுஸ்திரேலியாவில் நின்றவேளையில் தனது எண்பத் தைந்தாவது வயதில் அவர் வீட்டில் கீழே விழுந்து தொடை எலும்பு உடைந்துவிட்டது. வைத்தியசாலையில் அனுமதித்தோம். நான் பதட்டத்துடன் வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவ நிர்வாக வைத்தியநிபுணர் சத்தியமூர்த்தி ஐயாவுடன் தொடர்புகொண்டு உதவிகோரினேன். என்புமுறிவு வைத்தியநிபுணர் சிறிகிருஸ்ணா அவர்களின் விடுதியில் அனுமதிக்கப்பட்ட அப்பாவுக்கு ஒரு வாரத்தில் சத்திரசிகிச்சை நடைபெற்றது. இவ்விடத்தில் வைத்தியநிபுணர்கள் இருவரையும் நன்றியுடன் நினைக்கிறோம். எண்பது தாண்டிய பின்னர் பொதுவாக என்புமுறிவு சத்திரசகிச்சை செய்வது என்பது சவாலுக்குரியதாகவிருந்த போதும் அப்பாவின் உடல்நிலமை அதற்கு ஒத்துழைத்தது. வலுவான தேகத்தை அப்பா கொண்டிருந்தார்.

அப்பாவிடம் பல நல்ல பழக்கங்கள் இருந்தன. அவற்றுள் முதன்மை யானது தினக்குறிப்பு எழுதுவதும் அன்றாட செலவு விபரங்களை கணக்கறிக்கையாகப் பேணுவதும். இன்றளவும் நான் பின்பற்ற நினைத்து தோற்றுப்போகும் விடயங்கள் அவை. ஆனால் அப்பா தான் இயங்கிய காலம் வரை அதனைச் செய்தார். அதனைவிட முற்கூட்டிய தயார்ப்படுத்தல் அவரிடம் இருந்தது. தனது வேட்டி சட்டைகளை நன்றாக தோய்த்து அழுத்தி மடித்து உரிய வகையில் வைத்திருப்பார். அவரது அழுக்கு ஆடைகளோ தோய்த்து உலர்ந்த ஆடைகளோ வெளியில் இருந்தது குறைவு. அப்பாவின் இந்தப் பழக்கத்தின் பயனை அவரது இறப்புக்கு பின்னரும் நான் அனுபவித்தேன். அவரது மறைவு

நிகழ்ந்து மறுநாள் காலை வேட்டியும் வெள்ளைச் சேட்டும் அணிய வேண்டியிருந்தது. அவசரத்தில் வீட்டில் இருந்து வந்தமையால் கொண்டுவரவில்லை. நம்பிக்கையுடன் அப்பாவின் சூட்கேசைத் திறந்தேன். அப்பா ஏமாற்றவில்லை. இரண்டு வருடங்களுக்கு முன்னர் அவர் தோய்த்து மடித்து வைத்திருந்த அவரது வேட்டியும் வெள்ளைச் சேட்டும் என் உடலில் பரவி உணர்வூட்டின. (நன்றி அப்பா).

அப்பாவிடம் இருந்த இன்னொரு நல்ல பழக்கம் வாசிப்புப் பழக்கம். அவர் வாசிப்பை பொழுதுபோக்காக கொண்டிருந்தார். இளமையில் தீவிர வாசிப்பு ஆர்வலராக இருந்தமையால் நிறைய புத்தகங்களை வாங்கியிருந்தார். தாயாரும் அவற்றை சீராகப் பேணினார். காலையில் பத்திரிகை வாசிக்காது விட்டால் அப்பாவுக்கு அந்த நாள் விடியாது. சந்தைக்கு போய் வரும்போதும் அல்லது பின்நாட்களில் காலையில் ஆலயவழிபாடு முடித்து திரும்பும் போதும் பத்திரிகையுடனேயே வருவார். அவரது வாசிப்பு பழக்கத்தின் அனுபவமும் யோகப்பயிற்சியும் ஒரு தடவை அவருக்குப் பெரும் துணைசெய்தன.

ஒய்வுபெறுவதற்கு சில ஆண்டுகள் முன்னதாக பாடசாலையிலிருந்து வீடுதிரும்பும் போது ஏற்பட்ட விபத்து ஒன்றில் தலையில் பலமாக அடிபட்டமையால் அவரது நினைவுகள் முற்றாக அழிந்துவிட்டன. அவருக்கு அப்போது தெரிந்த ஒரு வார்த்தை “அமிர்தலிங்கம்”. தனது நெருங்கிய ஆசிரிய நண்பராகிய அவரிடம் பாடசாலையிலிருந்து விடைபெற்ற ஞாபகமோ என்னவோ அமிர்தலிங்கம் மட்டுமே அவருக்கு ஞாபகமிருந்த ஒற்றை வார்த்தை. தீவிர சிகிச்சைக்குப் பின்னர் வைத்தியர்கள் தலையில் ஒரு நரம்பு நசிபட்டமையால் ஞாபக மறதி ஏற்பட்டுவிட்டதாகவும் பயிற்சி செய்தால் மீளக்கொண்டுவர முடியும் சிலவேளை இயலாது போகும் எனவும் தெரிவித்துவிட்டார்கள். அப்பாவின் நெருங்கிய நண்பர் ஒருவர் அப்பாவிடம் வந்து அவர் யோகாசனப் பயிற்சிகளில் ஈடுபட வழிகாட்டினார். அப்பாவின் ஞாபகம் மெல்லத் துளிர்த்தது. மெதுமெதுவாகத் தேறி ஏறக்குறைய பூரண நலன்பெற்றார். இருந்தபோதும் சிலரது பெயர்களை உடனடியாக ஞாகப்படுத்துவதில் அவ்வப்போது சிரமத்தை எதிர் கொண்டார். ஆயினும் அப்பாவிருந்த நிலமையில் அவர் அடைந்த முன்னேற்றம் அவரது ஆத்ம பலத்தின் வெளிப்பாடாகவே நான் இன்று உணர்கிறேன்.

இதுபோன்றதொரு சம்பவம் அவர் மறைவதற்கு சில மாதங்கள் முன்னரும் நிகழ்ந்தது. தொடை எலும்பு முறிந்து சத்திரசிகிச்சை செய்யப்பெற்ற நிலையில் படுக்கையில் இருந்த போது செல்வச்சந்நிதி ஆலயத்துக்குச் செல்லவேண்டும் என விருப்புக்கொண்டிருந்தார். அழைத்துச் செல்லத்திட்டமிட்ட போது அப்பாவின் இளைய சகோதரர் கந்தசாமிச்சித்தப்பாகாலமாகிவிட்டார். இயலாதுபோய்விட்டது. அவரது முப்பத்தொராம் நாள் காரியம் நிறைவுபெறவே ஆலயத் துக்கு செல்வது சாத்தியம். இந் நிலையில் தனது சகோதரரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அப்பா மனதளவில் சற்று தளர்ந்து போனார்.

அதன் தொடர்ச்சியாக இருவாரங்கள் கழித்து ஒரு நாள் மூச்சுப் பேச்சின்றி அடங்கிவிட்டார். அத்துடன் கறுப்பு நிறமாக வாந்தியும் எடுத்தார். பதட்டப்பட்டு அம்மா எமக்கு தகவல் தர, ஓடிச்சென்ற போது நாமும் பயந்து விட்டோம். எனக்கு அப்பாவின் செல்வச் சந்நிதி ஆசையை நிறைவேற்றாமல் போய்விட்டேனே எனும் குற்றஉணர்வு மேலிட்டது. முருகனிடம் பாரத்தைப் போட்டுவிட்டு வைத்திய உதவியை நாடினோம். வைத்தியர் அப்பாவின் நிலமை மற்றும் கறுப்பு வாந்தி என்பவற்றை வைத்து அவரது இறுதிநாள்கள் அவையென முடிவெடுத்தார். சின்னமாமியும், கந்தசாமிச் சித்தப்பா தனக்கு துணையாக அப்பாவை அழைக்கப்போவதாக அழுதார். குலசிங்கச் சித்தப்பா ஒரு மாதத்துக்குள் தம்பியையும் அண்ணனையும் இழக்க வேண்டி ஏற்பட்டுவிடுமோ என ஏங்கினார். ராணி அத்தை அண்ணன்கள் இருவரின் இழப்பை தாங்கும் உளவலிமையுடன் இருக்கவில்லை. எனக்கு நம்பிக்கை தளரவில்லை. அப்பாவின் உடலில் உயிர் இருந்தது. எனது முழுக்கவனமும் அவரை செல்வச் சந்திக்கு அழைத்துச் செல்வதிலேயே இருந்தது. எல்லோரும் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார்கள்.

அப்பாவின் விருப்பம் இப்போது எனது விருப்பமாகவும் கனவாக வும் மாறியிருந்தது. அப்பாவின் காதுகளில் உங்களை செல்வச் சந்திக்கு அழைத்துப் போகவேண்டும் போய்விடாதீர்கள் எனச் சொன்னேன். அப்பா தன் விருப்பத்தை நிறைவேற்றாவிட்டாலும் எனது விருப்பத்தை நிறைவேற்ற உயிர்த்தெழுவார் என்பதில் எனக்கு நம்பிக்கையிருந்தது. சித்தவைத்திய நிபுணரும் உறவினருமான வைத்தியர் தனக்குமார் ஐயாவை அழைத்து வந்தேன். நாடி பிடித்துப்

பார்பதில் வல்லவரான அவர் பார்த்துவிட்டுச் சொன்னார் “பெருநாடித் துடிப்பு அடங்கிவிட்டது. இருப்பினும் சிறுநாடி துடிக்கிறது. இரண்டு நாள்கள் பார்ப்போம்” என்றவர் சொன்னபோது ஏதும் வைத்தியம் செய்வோம் எனக் கேட்ட போது சரிவாருங்கள் சில குளிசைகள் தருகிறேன் கரைத்துப் பருக்குங்கள் என்றார். கரைத்துக்கொடுத்தோம். பக்கத்திலிருந்த தாதிய சகோதரி கோபிகாவிடம் அப்பாவுக்கு ஒரு செலைன் ஏற்ற உதவிகோரினோம். மறுப்பின்றி வந்து உதவிசெய்தார். அப்பாவின் உடல்நிலையில் சிறிது மாற்றம் தெரிந்தது. மூன்று தினங்களில் உயிர்த்தார். மெதுமெதுவாக இயல்புக்குத் திரும்பினார். சித்தப்பாவின் காரியங்கள் முடிந்து மறுநாள் எனது காரின் முன்னி ருக்கையிலிருந்து ஊரைப் பார்த்த வண்ணம் வலம்வந்து அப்பா செல்வச்சந்நிதியானைத் தரிசித்தார். அவருக்கு அது பெரும் திருப்தி கொடுத்தது. எமக்கும் வாழ்நாள் ஆத்ம திருப்பதியை அப்பா தன் ஆத்ம வல்லமையால் தந்தார். இன்றளவும் அதனைப் பெரும் அதிசய நிகழ்வாகவும் சந்நிதியானின் பெருங்கருணையாகவுமே காண்கின்றேன்.

அப்பா எங்கள் வாழ்வின் ஒவ்வொரு தருணங்களிலும் ஏதொ வொரு வகையில் பின்னிருந்து இயக்கினார். எங்கள் வெற்றிகளின் போது நெகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். திருமணமாகி தனிகுடும்பம் என்றாகிய பின்னர் எங்கள் வாழ்வின் ஒவ்வொரு முக் கிய தருணங்களிலும் பிரசன்னமானார். எனது மகளுக்கு பால்பருக்கிய போதும் பின்னர் அவளை விற்று வாங்கிய போது அவளை வாங்கியும் ஏடு தொடக்கிய போது தேங்காய் உடைத்தும் அப்பா அருகிருந்து ஆசிர்வதித்தார்.

அப்பா ஒரு நிறைவான வாழ்க்கை வாழ்ந்து இன்றெங்கள் நினைவு களில் ஆழமாகப் பதிந்துவிட்டார். ஐப்பசிப் பரணி எனும் புனித நாளில் அவர் இறைபதம் அடைந்தமையும் அவர் உயிர்பிரிந்த போது வானம் பொழிந்தமையையும் பின்னர் அவரது சாம்பலை ஏந்தி சுடலையிலிருந்து புறப்பட்டு கீரிமலைக்கடலில் கரைக்கும் வரை வானம் தூறியமையையும் இறைசெயல்களாக எண்ணி நெகிழ்கின் றோம். அப்பாவின் நினைவுகள் இன்னும் இன்னும் நீளமாக எங்கள் வாழ்வு முழுவதும் விரியும்.

அப்பாவின் நினைவுகளுடன்
**அன்பு மகன் சர்வேஸ்வரா**

மகன் மற்றும் மகளுடன் இளமைக் காலத்தில்...



# தெய்வீக சொத்து எங்கள் அப்பா

எங்கள் அன்பு அப்பாவின் வாழ்வையும் அவர் எங்களுக்கு தந்த மறக்க முடியாத நினைவுகளையும் எண்ணிப்பார்க்கையில் அவரின் பிள்ளைகள் நாங்கள் பாக்கியசாலிகள் என்றே தோன்றும். அவர் வாழ்ந்த வாழ்க்கை அபூர்வமான ஒரு பயணம்.

எங்களைப் நற்பிரஜைகளாக்க அவர் கண்ட கனவுகளை நனவாக்க எத்தனையோ தியாகங்களைச் சுமந்தவர். சிலவற்றை நாங்கள் கண்டோம், ஆனால் நாங்கள் பார்த்துக்கொள்ள முடியாத எண்ணற்ற தியா கங்களை அவர் செய்திருந்தார். அமைதியாகவும் பொறுமையுடனும் நிதானத்துடனும் அவர் எடுத்த முயற்சிகளே இன்று எங்களை இந்த இடத்துக்கு கொண்டு வந்துள்ளது. எங்கள் குடும்பம் பல கடினமான நேரங்களை எதிர்கொண்ட காலங்களில் கூட அவற்றினை நாம் உணராமல் இருக்க அவர் சிரித்துக் கொண்டே அந்த சிரமங்களைச் சுமந்தவர்.

நம் சிறுபாராயத்தில் காலத்துக்கு காலம் நாம் சந்தித்த இடப் பெயர்வுகளிலும் போராட்ட சூழல்களிலும் எம்மை காப்பாற்றி வளர்ப்பதில் அவர் அடைந்த நெருக்கடிகளை சாமானியமாய் சமாளித் தவர். தனது துவிச்சக்கர வண்டி பயணத்தில் கடந்த பாதையை நாம் மோட்டார் வாகனங்களில் கடக்க கடினப்படும்போது உணரமுடிகிறது அப்பாவின் உன்னதமான பணியின் சிறப்பை. எங்கள் நலனுக்காக அவர் செய்த சேவை வாழ்க்கையின் இறுதிநேரம் வரை தொடர்ந்தது. எங்கள் வீட்டின் முதுகெலும்பாக இறுதிவரை வாழ்ந்தவர் எங்கள் அப்பா.

அன்பு, மரியாதை, நம்பிக்கை விசுவாசம் அர்பணிப்பு கடமை உணர்ச்சி நேரம் தவறாமை போன்ற உயர்ந்த பண்புகளுடன் வாழ்ந்தவர். அப்பாவை பார்த்து நேரம் கணித்துக்கொண்டு வாழ்ந்திருந்தோம். எங்களுக்கு எந்த வயதில் என்ன தேவைகள் விருப்பங்கள் என்பதை நாம் கூறாமலே தானாகவே உணர்ந்து செய்யக்கூடியவர். தன் பிள்ளைகளின் செயல்களிலும் நடத்தை முறைகளிலும் நம்பிக்கையோடு பயணித்தவர். யார் குறை சொன்னா

லும் தன் பிள்ளைகள் சரியான வழியில் சிறப்பாக தான் எதையும் செய்வார்கள் என்று சொல்லிநிற்பார்.

உறவுகளுக்கு இடையில் சிறிய பிளவுகள் உருவானாலும் அவற்றை சரிசெய்து, ஒரு குடும்பம் என்னும் சொல் அர்த்தம் தரும் வகையில் அனைவரையும் இணைத்து வைத்தவர். உறவுகளை பேணுவது, மதிப்பது, புரிந்துகொள்வது என தன் வாழ்வியலின் வழி பல நெறிகளை எங்களுக்கும் கற்றுக் கொடுத்தவர். பிறருக்கு உதவுவது என்பது அவருக்கு செய்ய வேண்டிய ஒரு செயலாக என்னாது விருப்புடன் செய்வார். விசுவாசமாய் தன் உறவுகள் ஒவ்வொருவரோடும் தன்னலம் கருதாது அவர்களின் மனம் புண்படுத்தாது வாழ்ந்தவர்.

எங்கள் இருவரையும் எங்களிடம் உள்ள ஆற்றல் தன்மை, கனவு, திறமை என்பவற்றுக்கு ஏற்ற வகையில் மதித்து எங்களுக்கே உரிய பாதையில் முன்னேற்றியவர். அவர் சொன்னது ஒன்றே:

"நல்ல மனப்பாங்கு கொண்ட மனிதராக இருந்தால்,<br>
வாழ்க்கை எங்கேயும் உயர்த்திக் கொண்டு போகும்."<br>
அதுவே என்றும் எங்கள் வாழ்க்கையின் தாரக மந்திரம்.

இறுதிவரை அவர் எங்களுக்காகவே வாழ்ந்தார் அவரின் வாழ்க்கை எங்களுக்கு ஒரு பாடம். அவரின் செயல்கள் ஒரு எடுத்துக்காட்டு அவரின் நினைவு ஒரு நிலையான ஆசீர்வாதம் எங்கள் வாழ்க்கைக்கு

அப்பா இன்று எங்களோடு இல்லாவிட்டாலும் அவரின் பிரிவு வேதனையளித்தாலும் நீண்ட காலம் அப்பா என்ற உறவோடு பயணிக்கும் பாக்கியம் பெற்ற குழந்தைகள் என்ற பெரும்பேறு பெற்றோம். எங்கள் அப்பா வாழ்ந்த விதம் அவர் கற்றுத்தந்த வாழ்வியல் நெறி விட்டுச்சென்ற நற்குணங்களும், அவர் கொடுத்த அன்பும், எங்களை வாழ்க்கையில் எப்போதும் வழிநடத்தும்.

உங்கள் நினைவுகள் எங்களுக்க ஒரு தெய்வீகச் சொத்து. நாங்கள் எப்போதும் உங்கள் நினைவுகளை சுமந்தவர்களாக வாழ்வோம் அப்பா.

அன்பு மகள்<br>
**லாவண்யா**

# மருமகனின் நினைவுகளில்

மாமா நீங்கள் காட்டிய வழிகாட்டுதல்கள் ஏராளம். பாடசாலைக் காலத்தில் ஒரு ஆசிரியராகத் தங்களை அறிந்திருந்தேன். பின் தங்கள் மகளைத் திருமணம் செய்து வந்தபோது எங்கள் வாழ்க்கையை வளப்படுத்துவதிலும் வழிப்படுத்துவதிலும் தாங்கள் காட்டிய அக்கறை பெரிது.

பல விடயங்களைச் சொல்லால் அன்றி செயலால் உணர்த்தி நம்மை செப்பனிட்டிர்கள். நான் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்த காலங்களில் வழிகாட்டுதல்களை வழங்கி அறிவுரை சொன்னீர்கள்.

கடல்கடந்து அரசாங்கப் பணிக்காக சென்ற போது எனது பிள்ளைகளின் நலனில் அக்கறையுடன் இருந்தீர்கள். அவர்களை பாடசாலைக்கு அழைத்துச் செல்வது மீள அழைத்து வருவது என பல காரியங்களில் தாங்கள் அளித்த பங்களிப்பு எமது நெருக்கடியான தருணங்களில் பெரும் துணைசெய்ததை மறவோம்.

எனது தந்தையாரைப் பராமரிக்கும் பொழுதுகளில் அவ்வப்போது தருணம் அறிந்து தாங்கள் ஆற்றிய உதவிகள் பெரும் துணையாக நின்றன. எனது சகோதரர்கள் சகோதரிகள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று புன்முறுவலுடன் பழகும் தங்கள் இயல்பு தங்களின் தனித்துவமாகவிருந்தது. உறவுகளை நேசிக்கும் பாங்கு தங்களுக்குரித்தான தனித்துவம்.

ஆண்டுகள் பல கடந்தாலும் தங்கள் நினைவுகள் எங்களுடன் என்றும் இருக்கும். உங்கள் ஆத்மா கும்பழாவளையான் பாதங்களில் அமைதி அடைக.

அன்பு மருமகன்
**கு.திலீபன்**

# மருமகள் மனதிலிருந்து

திருமண பந்தத்தின் வழி ஏறக்குறைய 15 வருடங்கள் உங்களோடு பழகக்கிடைத்தது. தங்களுடன் பழகிய தருணங்கள் ஒவ்வொன்றும் ஏதோவொரு விதத்தில் அழியாத ஞாபகங்களாக பதிந்துள்ளன. அதிகாலையிலேயே துயில் எழும் இயல்பு, பத்திரிகை வாசிக்கும் பழக்கம், உறவுகளை நேசிக்கும் தன்மை, தெய்வீக நாட்டம் என்பன உங்களில் நான் கண்ட சிறப்பான அடையாளங்கள்.

அவ்வப்போது தாங்கள் கூறும் அனுபவப் பகிர்வுகள் ஆலோசனைகள் எங்கள் சிந்தனைக்குரியதாகவிருந்தன.

கால் முறிந்து சிகிச்சை பெற்ற போது நாம் வெளிநாட்டில் நின்றோம். தங்கள் உடல் ஆரோக்கியத்துடன் இருக்கப் பிரார்த்தித்தோம். மீளவும் நாடு திரும்பியதும் ஓடிவந்து உங்களைச் சந்தித்த பொழுதுகளில் நீங்கள் அடைந்த மகிழ்ச்சி கண்டு நெகிழ்ந்தோம்.

வாழ்வின் நிறைவை அண்மித்த நாள்களில் நினைவுகளில் மறதி ஏற்பட்டாலும் நாங்கள் தங்களைப் பார்க்க வரும்பொழுதுகளில் எங்களை அடையாளம் கண்டு நெகிழ்வீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்கின்றோம்.

அன்பு மருமகள்
**சிவநயனி சர்வேஸ்வரா**

**“தன் குழந்தைகளுக்காக, தன்
கனவுகளைத் தியாகம் செய்யும்
ஒரே கதாநாயகன், அப்பா மட்டுமே.**

The only hero who sacrifices
his dreams for his child is the father.”

# அண்ணா எனும் அருமருந்தன்ன உறவு

எங்கள் குடும்பத்தின் மூத்த பிள்ளை அண்ணா. அதனால் அவர் தாங்கிய சுமைகளும் பொறுப்புக்களும் பெரிது. தந்தையாருடன் இணைந்து விவசாயத்தில் ஈடுபட்டமையாகலாம் பின் மலையத்தில் பணிபுரிந்த போது பெற்ற சிறு சம்பளத்தில் குடும்பத்துக்கும் கொடுத்து தன் கடமையை நிறைவேற்றியமையாக இருக்கலாம் என அவர் தனது கடமைகளை சிறப்பாகச் செய்தார்.

நான் தொழில் வாழ்வில் விவசாய துறை சார்ந்தும் பின் காணி அதிகாரியாகவும் நிமிர ஆரம்பத்தில் அடித்தளமிட்டவர் அண்ணா. அவர் தான் கற்ற விவசாய பயிற்சி நெறியைப் தனது தொழில் முன்னேற்றத்துக்கான துறையாக தெரிவுசெய்யாத போதும் அதன் பெறுமதியை உணர்ந்திருந்தார். அதனால் என்னை வழிப்படுத்தி அந்தத் துறையில் முன்னேற வழி செய்தார். நான் நீண்ட நாள்கள் வன்னியில் பணியாற்றிய போது இணுவிலுக்கு வந்து போவதில் போக்குவரத்து நெருக்கடிகள் இருந்தன. அவ் வேளைகளில் எனது பொறுப்பின் ஒரு பகுதியை ஏற்று குடும்பத்துக்காக பாடுபட்டார்.

எங்கள் குடும்பத்தின் உயர்வுகள் அனைத்தையும் கண்டு நெகிழ்ந்தார். அண்ணா அதிகம் ஆசையற்றவர். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என வாழப்பழகியவர். உறவுகளை நேசிக்க கற்றுத்தந்த பெருந்தகை. மற்றவர்களுக்கு பிரதிபலன் கருதாது உதவி செய்யும் மனப்பாங்குடையவர். மூத்த பிள்ளை என்பதால் என்னவோ அம்மா மீது அளவுகடந்த அன்பை வைத்திருந்தார். அம்மாவும் அவ்வாறே இருந்தார். அம்மபாவுக்கு நினைவு இருக்கும் வரை அண்ணா அவருக்கு ஒரு குழந்தையாகவேயிருந்தார்.

எங்கள் சகோதரிகளின் வாழ்வின் வளத்திலும் அண்ணாவின் பங்கு இருந்தது. பிள்ளைகளின் திருமண காரியங்கள் எல்லாவற்றையும் முன்னின்று நடத்தி வைத்தார்.

இன்று ஒரு வருட காலப்பகுதிக்குள் எனது இரண்டு ஆண் சகோதரர்களையும் எனது மருமகனையும் இழந்து தவிக்கும் பெரும் வேதனை எனக்காகியது. அவர்கள் மூவரும் எனது வாழ்வில் பல நினைவுகளைத் தந்து சென்றிருக்கின்றார்கள். அண்ணாவின் நினைவுகள் ஓராயிரம். சிறுவயது தொடக்கம் அவர் இயங்கித் திரிந்த காலம் வரை எங்கள் உறவுப் பிணைப்பு தந்த உணர்வு தழும்பும் விடயங்கள் என்றும் மறக்கற்பாலன.

அண்ணாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமித் தாயையும் மஞ்சத்தடி முருகனையும் மனதார இறைஞ்சுகிறேன்.

அன்புத் தம்பி
**குலசிங்கம் (நடராஜா)**

**“ஒரு நல்ல தந்தை தன் குழந்தைக்குக்
கற்றுக்கொடுக்கும் சிறந்த பாடம்,
உலகைத் தைரியமாக எதிர்கொள்ளும்
தன்னம்பிக்கையும், நேர்மையுமே.**

The best lesson a good father teaches his
child is the self-confidence and honesty to
face the world bravely.”

# இளைய சகோதரியின் நினைவுகளில்

அண்ணை எனும் சொல் எங்கு கேட்டாலும் முதலில் நினைவுக்கு வருபவர் நீங்கள் தானே. ராணி ராணி என நீங்கள் அழைக்கும் ஓசை இன்னும் காதுகளில் ஒலிக்கின்றது. உங்களுக்கும் எனக்கும் இடையேயான வயது இடைவெளி காரணமாக ஒரு பிள்ளையைப் போல என்னை நேசித்தீர்கள்.

எனது குரல் வண்மை கண்டு இசைத்துறையில் என்னைப் பயிற்றுவிக்க நீங்கள் எடுத்த முயற்சிகள் எனக்கு பசுமையான நினைவுகள். பாடசாலைக் கல்வி முடித்து வீட்டில் இருந்த போது தையல் பழக வேண்டும் எனச் சொன்னபோது உடனடியாகவே ஒரு தையல் மெசின் வாங்கித் தந்து ஊக்கப்படுத்தினீர்கள்.

அம்மாவுடனேயே நானும் என்னுடனேயே அம்மாவும் இருந்தமையால் உங்கள் பிரசன்னம் எப்போதும் என் தரிசனத்துக்கு கிடைத்தது. அளவெட்டியில் தொலைவில் இருந்தாலும் அடிக்கடி எங்களைப் பார்க்க ஓடிவருவீர்கள். உங்கள் எண்பது வயதிலும் சைக்கிள் மிதித்து வந்து என்னிடம் வாங்கியருந்தும் ஒரு குவளைத் தேநீர் தங்கள் உற்சாகத்தின் மருந்து என்பதை நான் அறிவேன்.

எனது கைப்பக்குவத்தில் சாப்பிட்டு மகிழ்ந்து அதன் சுவையை மெச்சுவீர்கள். இடப்பெயர்வுக் கால நெருக்கடியில் இணுவிலில் இருந்த போது உங்களுடனும் அண்ணியுடனும் உங்கள் பிள்ளைகளுடனும் இணைந்து வாழக்கிடைத்தது. பிள்ளைகளின் நலனில் நீங்கள் கொண்ட அக்கறை பெரிது. இன்று நீங்கள் இல்லை என்றபோது இதயம் ஏற்க மறுக்கின்றது. எங்கள் குடும்ப விருட்சத்தின் விழுதுகள் இருவரை ஒரு வருடத்துக்குள் இழந்து தவிக்கும் நிலமை நெஞ்சுத் துயராய் கனக்கின்றது. உங்கள் ஆத்மா அம்பாளின் பாதங்களில் அமைதியடையப் பிரார்த்திக்கின்றேன் அண்ணா.

இளைய சகோதரி
**விமலராணி (ராணி)**

# நினைவுகள் எப்போதும் மங்குவதில்லை

சிலர் எங்கள் வாழ்க்கையில் ஒளியாக வந்து நிற்கிறார்கள் அவர்களின் அன்போ, பரிவோ, சிரிப்போ அனைத்தும் இன்று மனத்துடிப்பாய் வாழ்கின்றன. பிரிவின் வேதனை நம் உள்ளத்தை தொட்டு சொன்னாலும் உங்கள் அமைதியான சிறப்பு எங்களுக்குள் நிழலாக இல்லை ஒளியாகவே நிற்கிறது.

நீர் சென்ற பாதை அமைதியான ஒன்று ஆனால் உங்கள் அடிகள் எங்கள் இதயத்தில் கேட்கின்றன. ஒரு குடும்பத்தின் உறுதியாய் ஒரு இல்லத்தின் நம்பிக்கையாய் நீங்கள் ஏந்திய பொறுப்புக்கள் இன்றும் எங்களைச் சீர்படுத்துகின்றன. நீங்கள் விட்டுச் சென்ற வார்த்தைகள், அடக்கம், தலம் எங்கள் வழிபாட்டும் தீ பந்தங்களாக நிற்கின்றன.

இன்று உங்களை நினைவு கூர்வோம் என்பதல்லா! ஒவ்வொரு நாளும் நினைவுகூர்ந்து நன்றி கூறுகிறோம். அன்பால் நம்மை கட்டிய உங்கள் வாழ்வு எங்களின் வாழ்வில் என்றும் தங்ககக் குரலால் ஒளிக்கட்டும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மருமகன்
**தி.வரதன்**

**தாய் அன்பு தெய்வீகம் என்றால்,
தந்தை அன்பு வாழ்க்கைக்கு வழிகாட்டும்
ஒரு கலங்கரை விளக்கம்.**

If mother's love is divine, father's love is a lighthouse guiding life.

# இனி எப்போ காண்போம்?

எங்கள் அப்பாவின் அன்புத் தங்கையை கரம் பற்றி எங்கள் அப்பாவிற்கு அன்புக்குரிய மச்சானாகவும் எனது அம்மாவிற்கு பாசமுள்ள அண்ணனாகவும் எங்கள் மீது பாசமும் பற்றும் உள்ள ஆசானாகவும் மாமாவாகவும் திகழ்ந்தீர்கள். இன்று உங்கள் நினைவுகளை எங்களுடன் விட்டு நீண்ட தூரம் இறை நிழல் பெற்று சென்றுவிட்டீர்கள்.

எங்கள் குழந்தைப் பருவத்தில் மாமா மலையகப் பகுதியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பாடசாலை விடுமுறை நாட்களில் வரும் பொழுது பல பொருட்களை வாங்கிக்கொண்டு வந்து எங்களை மகிழ்விப்பார்.

எங்கள் மாமா எவரோடு உரையாடும் போதும் சிறு புன்னகையுடன் உரையாடுவார். அடிக்கள உறவுகளைச் சந்தித்துப் பேசிடுவார். உறவுகளை மதிப்பவர், இறை பக்தி கொண்டவர். கடினமாக உழைப்பவர், சினம் கொண்டும் மற்றோரை சீற்றம் கொள்ளாதவர், உதவுவதில் உத்தமர், விவசாயத்தில் நாட்டம் கொண்டு அதில் வெற்றியும் கண்டுள்ளார். இவ்வாறு பன்முகத் திறமை கொண்டு “வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள்” ஒருவராகிவிட்ட எங்கள் மாமா, அத்தை இருவரினதும் ஆசிகளை வேண்டி அவர்களது ஆத்ம சாந்திக்காக கண்ணீரோடு எங்கள் பெற்றோருடன் இணைந்து இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் பாசமுள்ள
**சுந்தரி மச்சான், கிரிசா (தங்கை),**
**மருமக்கள்.**

# பெரிய மாமா நினைவகலா உறவு

எங்கள் பெரிய மாமா நினைவகலா உறவு. அவருடன் பழகிய நாள்கள் மிகவும் பசுமையானவை. எங்கள் ஒவ்வொருவரினதும் வாழ்வில் ஏதோவொரு விதத்தில் பெரிய மாமாவின் செல்வாக்கு இருக்கும். எங்கள் பலரது மங்கலக் காரியங்களை முன்னின்று நடத்தியவர் அவர்.

அடிக்கடி எங்கள் வீடுகளுக்கு வரும் அவர் எமது சுகதுக்கங்கள் குறித்து அக்கறையுடனிருந்தார். அவரது வழிகாட்டுதல்கள் பெரும் துணைசெய்தன. எமது குடும்பத்தின் முதல் அரச உத்தியோகத்தர் அவரே. இன்று அவர் எமை விட்டுப் பிரிந்தாலும் அவரது நினைவுகள் அகலாதுள்ளன. அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் மறவா நினைவுகளுடன்
**மருமக்கள்**
**(சகோதரி லீலாவதி மற்றும் சிவயோகத்தின் பிள்ளைகள்)**

**“நான் பார்க்காதபோதும் என்னைக் கண்காணித்து, என் வாழ்வில் எந்தத் தவறையும் நிகழாமல் பாதுகாத்த கடவுளின் இரண்டாவது உருவம் என் தந்தை.**

My father is the second form of God who watched over me even when I wasn't looking, and protected my life from any harm.”

# பெரியப்பா எனும் பெறுமதியான உறவு

எங்கள் அப்பாவின் அண்ணாக வாய்த்த நீங்கள் பெரியப்பா எனும் உன்னத உறவாக எமக்கிருந்தீர்கள். தங்களுடன் வாழ்ந்த பழகிய காலங்கள் பசுமையானவை. மற்றவர்களுக்கு தீங்கு நினைக்காத மனமும் பிறர் மனம் புண்பட பேசியறியாத வார்த்தைகளும் உங்கள் நற்பண்புகளின் இலக்கணமாயிருந்தன.

ஆசிரியராக இருந்த நீங்கள் எங்கள் கல்வி சார் வளர்ச்சிகள் குறித்து அவ்வப்போது அறிந்து மகிழ்வீர்கள். அப்பாவின் இளமைக் காலத்தில் நல்ல வழிகாட்டியாக தாங்கள் இருந்தீர்கள் என அவர் அடிக்கடி சொல்லுவார். தாங்கள் முதலில் பெற்ற அரச உத்தியோகம் எமது தந்தையையும் அதன் வழி உயர உந்துதலாகவிருந்தது. இன்று எமது பரம்பரையில் பலர் உயர்ந்த அரசாங்க நிலைகளில் இருப்பினும் நீங்களே அதன் முதன்மையானவர்.

எங்கள் வீட்டில் நடைபெறும் அனைத்துக் காரியங்களுக்கும் முதல் ஆளாக வந்து நிற்பீர்கள். உறவுகளை மதிக்கவும் நேசிக்கவும் நீங்கள் எங்களுக்கு உதாரணமாகவிருந்தீர்கள். உங்கள் இல்லாமை இன்று எமது பெரும் குடும்பத்துக்கு இழப்பே உங்கள் ஆத்மபா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பகலா நினைவுகளுடன்
**பெறாமக்கள்**
**கவிதா, அரவிந்தன், சங்கீதா, கிரிதரன்**

# சித்தப்பா எனும் சிறந்த மனிதர்

எங்கள் சித்தப்பா இன்று எம்முடனில்லை. அவரது நினைவுகள் மட்டுமே எம்முடன் என்றும் உள்ளன. சித்தப்பா எங்கள் வாழ்வில் மிக முக்கியமானதொருவராக இருந்தார். எங்கள் சிறுவயது தொடக்கம் இன்று வரை எம்மை நேசித்த ஒரு உறவு. எங்கள் துன்பம் துயரம் இன்பம் எல்லாவற்றிலும் அவர் துணையாகவிருந்தார்.

அன்றியும் அவரும் எங்கள் வாழ்வில் கனதியான செல்வாக்கைக் கொண்டிருந்தனர். அவர்களது வழிகாட்டுதல் எங்கள் வாழ்வை வளப்படுத்தின. நீண்ட காலம் வாழ்ந்த எங்கள் சித்தப்பா சினந்து அறியாதவர். எவருடனும் பகைமை பாராட்டாத பண்பாளர். எங்கள் உறவுகள் அனைவரையும் இணைத்து வைத்திருந்த பிணைப்பு அவர். அந்தப் பாசப் பிணைப்பு இன்று அறுந்துவிட்டது. அவரது ஆத்மா இறைவன் தாழ்களை அடைந்துவிட்டது. அவரது நினைவுகள் என்றும் எம்முடனிருக்கும்.

பிரியமுடன் என்றும் நேசிக்கும்
**பெறாமக்கள்**

**“ஒரு மகள் தன் தந்தையின்
கையைப் பிடித்து நடக்கும்போது, உலகின்
எந்த சவாலையும் எதிர்கொள்ளும் தைரியம்
அவளுக்குள் பிறக்கிறது.**

When a daughter walks holding
her father's hand, the courage to face
any challenge in the world is born
within her.”

# மாமா எனும் மகத்தான மனிதர்

எங்கள் மாமா எமக்கு நல்லதொரு வழிகாட்டியாகவிருந்தார். அவரதும் எங்கள் அத்தையினதும் ஆலோசனைகள் பல எமது வாழ்வில் பயன்களைத் தந்தன. இன்று அவர் இல்லாத பொழுதுகளில் நினைவுகளை மீட்கும் போது எமது சிறுபராயத்தில் அவர் எம்முடன் பழகிய பொழுதுகள் பசுமையான பல ஞாபகங்களை மீளக்கிளறுகின்றன.

நாங்கள் படித்த பாடசாலையில் அவர் ஆசிரியராகவிருந்தார். அதனால் பாடசாலையில் எம்மை கரிசனையுடன் கண்காணித்தார். எமது பெற்றோரின் விவசாய நடவடிக்கைகளில் அவ்வப்போது துணை நின்றார். அவர்களும் மாமாவின் விவசாயத்துக்கு துணைசெய்தனர். மாமா எங்கள் வீடுகளுக்கு அடிக்க வந்து நலம் கேட்பார். இன்று ஊர்விட்டு நாங்கள் சிலர் தொலைவான பொழுதுகளிலும் எம்மைத் தேடி வருவார். எமது பெற்றோரின் நலன்களை விசாரிப்பார். அவர் இன்று எம்முடன் இல்லை எனும் வெற்றிடத்தை நாம் உணர்கின்றோம். அவர் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

நெகிழும் நெஞ்சத்துடன்
**மருமக்கள்**

**"தந்தையின் கைகள், உலகிலேயே மிகவும் பாதுகாப்பான இடமாகும். அவருடைய நிழலில் வளர்வது, ஒரு குழந்தையின் மிகப்பெரிய பாக்கியம்.**

A father's hands are the safest place in the world. Growing up in his shadow is a child's greatest fortune."

# அப்பப்பா இனி உங்களை எப்போது காண்போம்

அப்பப்பா எனும் உறவை இன்று நான் இழந்து நிற்கிறேன். எனது வாழ்வின் மகிழ்வான ஒவ்வொரு தருணங்களிலும் தாங்கள் பிரசன்னமாக இருந்தீர்கள். அம்மாவும் அப்பாவும் அத் தருணங்கள் குறித்துச் சொல்லும் போது ஆர்வமாகக் கேட்கும் பொழுதுகளில் உங்கள் நினைவுகள் வந்து மோதும்.

தாங்கள் இயலாது படுத்திருந்த பொழுதுகளில் தங்களை வந்து பார்க்கும் போது விழிகளை அகலத்திறந்து எங்களைப் பார்ப்பீர்கள். உங்கள் விழியோரம் கண்ணீர் கசியும்.

கடைசியாக உங்களைப் பார்த்தபோது உங்கள் கைகளைப் பிடித்து என் உணர்வைப் பரிமாறினேன். அமைதியாக இருந்தீர்கள்.

உயிரற்று நீங்கள் உறங்கிய போது எங்கள் உணர்வுகளில் நிறைந்து அகலாத இடம்கொண்டு இன்று படமாகினீர்கள்.

உங்கள் ஆத்மா அமைதிபெறப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புப் பேர்த்தி
**குஹப்பிரணவி**

**ஒரு தந்தையின் மௌனம்தான்,
ஆயிரம் வார்த்தைகளை விட அதிகம் பேசும்.
அவர் தன் செயல்களாலேயே தன் அன்பை
வெளிப்படுத்துவார்.**

A father's silence speaks more than a thousand words. He expresses his love through his actions.

# தாத்தா எமைத் தாங்கிய பெரும் தெய்வம்

தாத்தா என்று தான் நாங்கள் உங்களை அழைத்தோம். எங்கள் குறும்புகளையும் குழப்படிகளையும் ரசித்தீர்கள். சிலவேளைகளில் அவை எல்லையற்றுப் போனால் கண்டித்து திருத்தினீர்கள். பாலர் பள்ளிக்கூடத்துக்கு எங்களை அழைத்துச் சென்று வந்த பொழுதுகள் என்றும் பசுமையானவை.

சந்தனப்பொட்டு தவழும் உங்கள் முகம் என்றும் மறக்க முடியாதது. இறுதியில் தாங்கள் படுக்கையிலிருந்த போது நாங்கள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு தங்களுக்கு திருநீறு பூசியும் பொட்டு வைத்தும் உங்கள் முகத்தின் மலர்ச்சி கண்டு மகிழ்ந்தோம்.

நீங்கள் இன்று எங்களுடன் இல்லாவிட்டாலும், உங்கள் அன்பும், பாசமும், சொல்லிக்கொடுத்த நல்லபழக்கவழக்கங்கள் அறிவுரைகளும் எங்களின் மனங்களில் என்றும் உயிரோடு இருக்கிறது.

உங்களை நினைக்கும் போது எங்கள் மனதில் ஒரு வெற்றிடமும், அதே நேரத்தில் ஒரு இனிய நினைவுகளின் பெருங்கடலும் எழுகிறது.

உங்கள் ஆத்மா இறைவன் தாளில் அமைதிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

பேரப்பிள்ளைகள்
**சங்கவி மற்றும் கர்ணிகா**

**“வாழ்க்கை என்பது ஒரு கடினமான புத்தகம். அதைப் புரிந்துகொள்ள ஒவ்வொரு வரியிலும் விளக்கமளிக்கும் உரைநடைதான் அப்பா.**

Life is a difficult book. Father is the commentary that explains every line to understand it.”

# உயிர் காக்க துணை நின்ற உத்தமர்

உங்களை எனக்கு எனது நெருங்கிய நண்பனின் தந்தையாகவே சந்தித்தேன். பல்கலைக்கழகத்தில் உங்கள் மகனுடன் ஏற்பட்ட நட்பும் அதன் வழி விரிந்த உறவும் உங்கள் குடும்பதில் ஒருவனாக என்னை மாற்றியது. நாட்டில் ஏற்பட்ட போர்நெருக்கடிகளின் போது உங்கள் வீட்டில வந்து தங்கியிருந்த அந்த நாட்கள் இன்றும் பசுமையாக நினைவில் உள்ளன. எனது பெற்றோர் சகோதரர்களுடான தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்ட நிலையில் மன உழைச்சலுக்குள்ளாகியிருந்த பொழுதில் உங்கள் அன்பும் ஆதரவும் உற்ற துணைசெய்தன.

மீண்டும் வன்னிக்கு கடல்வழி திரும்ப முயற்சி எடுத்தபோது தாங்கள் என்னைத் தடுத்து அவசரப்படவேண்டாம் நிலமை சுமுகத்துக்கு வரும் வரை எங்களுடனேயே இருங்கள் என கூறிய ஆறுதல் வார்த்தைகள் இன்றும் காதில் ஒலிக்கின்றன.

இருந்தும் போர் நெருக்கடி,பல்கலைக்கழகம் மூடப்பட்டமை, அடுத்து என்னாகும் எனும் அச்சத்தை தோற்றுவிக்க தங்களைச் ஒருவாறு சமாளித்து வன்னிக்குப் போனேன். அங்கு எனது வாழ்க்கை இன்னொரு திசையில் பயணப்பட்டபோது ஏற்பட்ட நெருக்கடிகளுக்கும் தாங்களே தீர்வு தந்தீர்கள். இன்று நான் உயிருடன் இருக்க நீங்கள் செய்த அந்த உதவி பெரும் துணைநின்றது.

மீண்டும் போர் முடிந்து வன்னியிலிருந்து மனைவியுடன் திரும்பிய போது எங்களைப் பொறுப்பேற்று பராமரித்த பெருந்தன்மையை என்றும் மறவோம். பின்னர் பல்கலைக்கழக கல்வி மனைவியின் வேலை என இணுவிலுக்கு நகர வேண்டி ஏற்பட்ட போது தங்கள் சகோதரரின் வீட்டை ஒழுங்கு செய்து எங்களுக்கு தங்குமிட வசதியளித்தீர்கள். இவ்வாறு எங்கள் மறுவாழ்வின் ஆரம்பத் தருணங்களில் நீங்கள் ஆற்றிய உதவிகள் என்றும் மறக்கற்பாலன.

உங்கள் கடின உழைப்பு, கடவுள் நம்பிக்கை, உறவுகளுடான நெருக்கம் எனும் நற்குணங்கள் முன்னுதாரணங்கள் ஆனவை. உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் இருக்கும். ஆத்மா சாந்தியடைய வற்றாப்பளை கண்ணகித் தாயைப் பிரார்த்திக்கின்றேன்.

பெறாப்பிள்ளை
**தமிழ்**

# நேராக நிமிரும் மனிதர்

வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் இயல்பு கொண்டவர் சி.இரத்தினசிங்கம் ஆசிரியர் அவர்கள். எம்மோடு அருணோதயக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தபோது, நெருக்கீடு மிகுந்த யுத்த காலத்தில், இன்னொரு ஆசிரியருக்குச் சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைக்கு, இந்தியா செல்வதற்கு நிதி உதவி தேவைப்பட்டது. வலிகாமம் வலயத்தில் உள்ள பாடசாலைகள் எல்லாவற்றுடனும் தொடர்புகொண்டு நிதி சேகரித்துக் கொடுப்பதில் முன்னின்று உழைத்தவர் இவர் என்பது நான் சாட்சியாக இருந்து நேரில் அவதானித்த விடயம். அவ்வாறு சிகிச்சை பெற்ற ஆசிரியர் இன்னும் நலமோடு வாழ்கிறார் என்பது குறித்துரைக்கத்தக்க விடயமாகும். "எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கும்" இத்தன்மையை 1976இல் இரத்தினபுரியில் இவரை ஆசிரியராக அறிந்ததில் இருந்து அவதானித்து வந்துள்ளேன். இரத்தினபுரிச் சிவன்கோயிலில் தங்கியிருந்த சைவத்தமிழ் உத்தியோகத்தர்களிடை நாம் இருவரும் இருந்தோம். இரத்தினபுரி மத்திய மகா வித்தியாலயத்தில் இருவரும் ஆசிரியர்களாகப் பணி புரிந்தோம். 1982இல் நான் அருணோதயக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்தபோது இவரும் வந்து அங்கேயே சேர்ந்தார். இவ்வாறு பலகாலம் இருவரும் சமந்தாரப் பயணம் செய்திருக்கிறோம்.

இரத்தினபுரியில் இருக்கும்போதே தமிழர் ஆசிரியர்சங்க நிர்வாக சபை உறுப்பினராக இருந்து ஆசிரியர்களுக்குச் சேவை செய்தார். அப்பணியை அருணோதயக் கல்லூரியிலும் தொடர்ந்தார். அளவெட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தொடர்பான இவரது சமூகப் பணியும் அளப்பரியது என்று கருதுகிறேன். 1990களில் பேரனர்த்த காலத்தில் குடும்பங்கள் இடம்பெயர்ந்ததுபோல் பாடசாலைகளும் இடம்பெயர்ந்தன. அருணோதயக் கல்லூரி, மருதனார்மடம் இராம நாதன் கல்லூரிக்கு இடம்பெயர்ந்தது. அப்போது நான் பிரதி அதிபரா யிருந்தேன். யூனியன் கல்லூரிபோன்ற வேறு பெரிய பாடசாலைகளும் பல சிறிய பாடசாலைகளும் கூட இராமநாதன் கல்லூரி வளாகத்தை நோக்கிப் படை எடுத்ததால் அங்கு பெரும் இடநெருக்கடியைச் சந்திக்க

நேர்ந்தது. கல்லூரி வளாகத்தினுள் தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கும் எமது முடிவைச் செயற்படுத்துவதில் இரத்தினசிங்கம் ஆசிரியர் அவர்கள் பெரும் உறுதுணையாக இருந்தார் என்பது ஒருபோதும் மறக்கமுடியாத விடயமாகும்.

இணுவில் சிவகாமி அம்மனிடத்திலும், கும்பழாவளைப் பிள்ளை யாரிடத்திலும் பெரும் பக்திகொண்ட ஆசிரியர் எந்த விடயத்தையும் சுற்றிச் சுற்றி வராமல் நேருக்கு நேர் பேசும் இயல்புடையவர். அது அவரது மன உறுதியின் சுட்டி எனலாம். இவரது பிள்ளைகள் இருவரும் அருணோதயக் கல்லூரியின் பழைய மாணவர்கள். இன்று நல்ல நிலையில் வாழ்கிறார்கள். இப்பூமியில் தன் கடமைகளை நல்ல முறையில் நிறைவு செய்து, முதுமையில் இயல்பாக இறைபதம் அடைந்துள்ளார். இவர் எம்மை விட்டுப் பிரிந்த செய்தி துயரைத் தந்தாலும் இறைவன் திருவடி நீழலில் நற்பேறு அடைந்திருப்பார் என்பதில் ஐயம் ஏதுமில்லை. குடும்பத்தினரின் கண்ணீரில் நானும் எனது குடும்பத்தினரும் பங்குகொள்கிறோம்.

**கி .மகேந்திரராஜா**
மேனாள் அதிபர்,
அருணோதயக் கல்லூரி.

முத்துச் சிப்பி,
விழிசிட்டி, தெல்லிப்பழை.

**"என் தந்தை ஒரு பணக்காரர் அல்ல;
ஆனால், அவர் எனக்குக் கற்றுக்கொடுத்த
சுயமரியாதையும், நேர்மையுமே உலகிலேயே
விலைமதிக்க முடியாத பொக்கிஷங்கள்.**

My father is not a rich man; but the self-respect and honesty he taught me are the world's most priceless treasures."

சம காலத்தில் பணியாற்றிய யா/அருணோதயக் கல்லூரி
ஆசிரிய குழாத்தினருடன்







இந்து மன்ற பொறுப்பாசிரியராக மாணவர்கள்
ஏனைய ஆசிரியர்களுடன்



ஆசிரியப் பணி காலத்தில் மாணவ முதல்வர் சபையுடன்
பொறுப்பாசிரியர்களுள் ஒருவராக



அதிபர் திரு.த.ஶ்ரீக்குமரனுக்கு ஆசிரியர் கழக தலைவராக
மாலை அணிவித்து வரவேற்றல்




அதிபர் திரு.ந.சிவபாதம் அவர்களின் பணி நயப்பு
விழாவில் தலைமையுரை ஆற்றும் சந்தர்ப்பம்



அதிபர் த.ஸ்ரீக்குமரன் அவர்களின் பிரியாவிடை நிகழ்வில்
மங்கள விளக்கேற்றல்



அதிபர் திரு.அ.ஸ்ரீக்குமரனின் பிரியாவிடை நிகழ்வில்
தலைமையுரை ஆற்றும் சந்தர்ப்பம்

# அன்புக்கு இலக்கணமானவர்

ஈழமணித் திருநாட்டில் வடபால் அமைந்த நிலவளம், நீர்வளம், கலைவளமும் ஆன்மீகப் பண்பும், ஒருங்கே அமையப் பெற்ற இணுவில் என்னும் கிராமத்தில் அம்மன் அருளால் சின்னத்துரை தம்பதிகளுக்குக் கிடைக்கப் பெற்ற செல்வப் புதல்வன் அமரர் சின்னத்துரை இரத்தினசிங்கம் அசிரியர் அவர்கள் 1937ஆம் ஆண்டு அவதாரித்தார்.

கற'க வேண்டிய வயதில் அனைத்தையும் கற்று ஆசிரியராகப் பணிபுரிந்தார். மலைநாட்டிலே தனது ஆசிரியப் பணியை தொடங்கி ஆசிரியர் கலாசாலைக்கு உள்வாங்கப்பட்டு ஆசிரியர் பயிற்சியை முடித்து இரத்தினபுரி மாவட்டத்தில் தனது ஆசிரியப் பணியை மேற்கொண்டார். நற்குணம், நற்பண்பு, சமயஇடுபாடு, கற்பித்தலில் ஆளுமைத் திறமை மற்றவர்களுக்கு நல்லறிவு புகட்டுதல், தன்னைச் சேர்ந்தவர்களுக்கு சரீர உதவி புரிதல், ஆளமை நிறைந்த அறிவு ஆகிய அனைத்து நற்பண்புகள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற அமரர் இரத்தினசிங்கம் அவர்களுடன் 1980அம் ஆண்டிலிருந்து எனக்கு அவருடன் பழகக் கூடிய வாய்ப்பு கிட்டியது.

அமரர் அவர்கள் இரத்தின மாவட்டத்தில் தொலஸ்வலை தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருக்கும் போது நான் வேறு பாடசாலையாக இருந்தாலும் நிவித்தி கலை பட்டிணத்தில் இருந்து இருவரும் ஒரே பஸ்ஸில் தான் பிரயாணம் செய்வோம். வரும் பொழுதும் அதே பஸ்ஸில் தான் பிரயாணம் செய்வோம். இருவரும் ஒரே இருக்கையில் இருந்து பிரயாணம் செய்வோம். அதனால் இருவரும் பஸ்ஸிற் குசர் நன்மை, தீமைகள், புதினங்கள் யாவையும் பகிர்ந்து கொள்வோம். அந்நேரத்தில் சிறந்த அறிவுரைகள் வழங்குவார். அப்படிப் பட்ட ஒருவருடன் பழகுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. நான் பெற்ற பெரும் பாக்கியம் என கரதுகிறேன்.

சிறிது காலங்களின்பின் இருவருக்கும் இடமாற்றம் கிடைத்து அமரர் அவர்கள் இறம்புக்கத்தை தமிழ் வித்தியாலயத்துக்குச் சென்று விட்டார். நான் இரத்தினபுரி தமிழ் வித்தியாலயத்தில் கற்பித்தேன். அக்காலங்களில் இருவரும் சந்திப்பது குறைவாக இருந்த போதும்

ஆசிரியர் கூட்டங்களிலே சந்தித்து உரையாடிக் கொள்வோம். அதே நேரத்தில்எனதுசகோதரனுக்கும்இறப்பு...இடமாற்றம்கிடைத்தபடியால் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் அங்கே இருவரும் சந்திக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. 1983இல் நடைபெற்ற கலவரத்தின் போதும் இருவரும் கோவிலிலே தங்கிய வேளையில்இருவருக்கும் அங்கேயும் தொடர்புகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

1983இன் பிற்பாடு இருவருக்கும் யாஃஅருணோதயக் கல்லூரியில் இடமாற்றம் கிடைத்து இருவருக்கும் அங்கேயும் அன்புடன் தொடர வேண்டிய பாக்கியம் கிடைத்தது. ஓய்வு நாட்களிலும் கூட அவர் என்னை சந்திக்கத் தவறுவதில்லை.

அமரர் அவர்கள் இரத்தினபுரி மாட்டத்தின் கற்பித்த காலங்களில் ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள், அயலவர்கள் அனைவரது அன்பையும், ஆதரவையும் பெற்று சந்தோஷமாக வாழ்க்கை நடத்தினார். அதைவிட கிராமத்தில் வாழ்ந்த சிங்கள மக்களின் அன்பையும், பாராட்டையும் பெற்ற நன்மகன்.

வள்ளுவன் காட்டிய இல்லறத்தின் படி வாழ்ந்த இமரர் இரத்தினசிங்கம் அவர்கள் சல்வேஷ்வரா இலாவன்யா, ஆகிய இரு புத்திரர்களைப் பெற்று,

“தக்கை மகற்காற்றும் நன்றி அவையத்து
முக்தி இருப்பச் செயல்”

என்ற குறள் மொழிக்கமைய புதல்வர்களை கல்வி அறிவில் சிறந்தவர் களாகவும், பண்பானவர்களாகவும், இறைபக்தி மிகுந்தவர்களாகவும் வளர்த்து உயர்வடையச் செய்த பெரமை அவரையே சாரும்

தமிழ் புலமையும், சைவ சித்தாந்த பெருமையும் நிறைந்த அமரர் அவர்கள். தமது 88ஆவது வயதில் தமது பூதவுடலை நீத்து புகழுடம்புடன் சிவபாதம் அடைந்தார். .......... ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கும்பழாவளை விநாயகனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

**ம.பத்மநாதன்,**
ஓய்வுநிலை பிரதிஅதிபர்,
யா/அருணோதயா

**2018இல் ஆசிரிய பணியில் ஆரம்ப நாள்களில்
கடமையாற்றிய இறம்புக்கந்தை தமிழ் மகா
வித்தியாலயத்துக்கு சென்று நினைவுகளை மீட்ட பொழுதுகள்**





**2018இல் ஆசிரிய பணியில் ஆரம்ப நாள்களில்**
**கடமையாற்றிய இறம்புக்கந்தை தமிழ் மகா**
**வித்தியாலயத்துக்கு சென்று நினைவுகளை மீட்ட பொழுதுகள்**





# அருணோதயாவில் கற்பித்த சக ஆசிரியரின் உள்ளத்தில் இருந்து...

ஆசிரியர் அமரர் திரு.இரத்தினசிங்கம் அவர்களுடன் பழகிய நினைவுகளை நினைக்கும் போது எனது உள்ளம் நெகிழ்கின்றது. 1990 காலப் பகுதிகளில் முதல் முதலாக அருணோதயக் கல்லூரிக்கு ஆசிரியராக காலடி எடுத்து வைத்த போது, அனுபவம் மிக்க ஆசிரியரான இரத்தினசிங்கம் ஆசிரியருடன் இணைந்து கற்பிக்கின்ற சமாந்தர வகுப்பு எனக்கு தரப்பட்டது. நானோ அனுபவமற்ற ஆசிரியை. இரத்தினசிங்கம் ஆசிரியர் எனக்கு ஒரு தந்தையாக,சகோதரனாக விளங்கியவர். அவர் ஒருபோதும் பாடக்குறிப்பு எழுதாமல் வகுப்புக் குள் நுழைந்ததை நான் காணவில்லை.

ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஏற்றால் போலவே அவரது கற்பித்தல் இருக்கும். கணித பாடத்தில் பல நுட்பங்களைப் பயன்படுத்தி சகல மாணவர்களையும் சென்றடைய வைப்பதில் அவருக்கு நிகர் எவரும் இல்லை என கூறுவேன். தற்போதைய ஆசிரியர்கள் புலமைப்பரிசில் பரீட்சையை மையமாகக் கொண்டே கற்பிக்கின்ற போக்கு காணப்படுகின்றது. ஆனால் எமது இரத்தினசிங்கம் ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளைகளின் அடிப்படை திறன்களுக்கும் அத்திவாரம் இட்டார்.

மாணவர்களுக்குரிய வாழ்க்கை கல்வினை கொடுத்தார். அவருடன் நான்கு வருடங்கள் சமாந்தர வகுப்பில் ஒன்றாக பயணித்த அனுபவங்களே எனது கற்பித்தல் பணிக்கு பெரிதும் உதவின. அவர் எனக்கு நல்ல அறிவுரைகளை கூறுவார் இருவரும் எமது இன்ப துன்பங்களை பகிர்ந்து கொள்வோம். யாருடனும் முரண்படுவதையோ, மனம் நோக கதைத்ததையோ நான் அவரிடம் காணவில்லை. ஆசிரியர் தன்னை போலவே தன் பிள்ளைகளையும் “பணியுமாம் என்றும் பெருமை” என்கின்ற வள்ளுவரின் குறளுக்கு பொருத்தமாக பண்பு,பணிவு உள்ளவர்களாக வளர்த்துள்ளார்.

ஒரு ஆசிரியருக்கு அளவுகோல் அவரவர் பெற்ற பிள்ளைகளே அந்த வகையில் அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் முன்னேற்றங்கள் அவரது அர்ப்பணிப்பான சேவைக்கு எடுத்துக்காட்டு ஆகும். எனக்கு அவரது நினைவலைகளை பகிர சந்தர்ப்பம் அளித்த அவரது பிள்ளைகளுக்கு நன்றி. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கும்பழாவளையானைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி. ஜெயவாணி தில்லைநாதன்**
ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர்
யா/அருணோதயக் கல்லூரி



# என் இனிய தோழன் இரத்தினசிங்கம்

அமரர் சின்னத்துரை இரத்தினசிங்கம் அவர்கள் அளவெட்டிக்கு மருகராக வருவதற்கு முன்னரே எனக்கு அறிமுகமான இனிய நண்பர். இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன்னர் விவசாயப் பாடசாலையில் ஒரு சாலை மாணாக்கராக அவர் எனக்கு அறிமுகமானார். அவரது இயல்பும் நட்புறவான பேச்சும் என்னைக் கவர்ந்திருந்தன.

கற்கும் காலத்தில் மிகவும் மிடுக்கான தோற்றத்துடன் நிமிர்ந்த நடையுடன் அவர் எம் மத்தியில் தனித்துவமாகத் தெரிந்தார். பாரம்பரிய விவசாயக் குடும்பத்திலிருந்து வந்திருந்த அவரது அனுபவ அறிவு விவசாயப் பாடநெறியைப் பயிலும் போது தெரிந்தது. அவரது கையெழுத்து மிகவும் அழகாகவிருக்கும். கற்கையுடன் தொடர்புடைய படங்களை மிகவும் அழகாக வரைவார்.

கற்கைநெறி முடித்ததும் நம்மில் பலர் விவசாயத்துறை சார்ந்த அரசாங்கத் தொழில்களைத் தெரிவுசெய்தோம். ஆனால் அமரர் இரத்தினசிங்கம் அவர்கள் ஆசிரியத் தொழிலைத் தெரிவுசெய்தார். அதற்காக அவர் நிறைய அர்ப்பணிப்புக்கள் செய்தார். அவ்வப்போது சந்திக்கும் போது விவசாயத் துறைசார் தொழில்துறைக்குள் வருமாறு அழைத்தபோதும் தான் விரும்பிய ஆசிரியத் தொழிலை அவர் விட்டுவர மனமற்று இருந்தார். படிக்கும் காலத்திலேயேயும் ஆசிரியத் தொழில் குறித்தே அதிக நாட்டத்துடன் இருந்தார்.

அவர் அளவெட்டியில் திருமணம் முடித்தது பெரும் விவசாயக் குடும்பத்தில். அவரது மாமனார் கதிரித்தம்பி மற்றும் மைத்துனர்கள் தேர்ந்த விவசாயிகள். முழுமையாக விவசாயத்தினால் வாழ்வில் செழிப்புப் பெற்ற குடும்பம் அவர்களது குடும்பம். அந்தக் குடும்பத்தில் மருகரானதும் அமரர் அவர்களும் தனது ஆசிரியத் தொழிலுக்கு சமாந்தரமாக விவசாயத்தில் ஈடுபட்டார். அப்போது விவசாயம் சார்ந்த பல சந்தேகங்களை என்னிடம் கேட்டுத் தெளிவார். அவரது

மனைவி எனது பள்ளிக் காலத்தில் எனக்கு இளையவராகக் கல்வி கற்றவர். மிகுந்த திறமையுள்ளவர். அமரது வாழ்வில் பல வழிகளில் துணையாக நின்றார்.

நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் சிலகாலம் தொடர்புகள் அற்றுப்போயிருந்தன. நான் மீண்டும் வன்னியிலிருந்து வந்த பின்னர் அவருடன் தொடர்புகள் ஏற்பட்டன. குறிப்பாக தனது மகனின் ஆளுமைகண்டு அவரை என்னிடம் அறிமுகம் செய்து வைத்தார். அதன் பின்னர் அவரது மகன் சர்வேஸ்வராவும் நானும் அளவெட்டி மகாஜன சபையில் தலைவர் செயலாளராகவிருந்து பல காரியங்களை ஆற்றினோம்.

அமரர் அவர்கள் அளவெட்டி மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திலும் பணிப்பாளர் சபை உறுப்பினராகவிருந்து பணிசெய்தவர்.

இன்று எனது இனிய நண்பர் இயற்கை எய்தியுள்ளமை உள்ளத்தை வருத்துகிறது. அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

இனிய நண்பர்
**வை.சுப்பிரமணியம் (வையண்ணா பாலு)**

**"குழந்தை பருவத்தில் நாம் விரும்பும் அனைத்தும் ஒரு மாயம் போல் நிகழ்ந்ததற்குப் பின்னால், ஒரு தந்தையின் ஓயாத உழைப்பு ஒளிந்திருந்தது.**

Behind everything we wished for in childhood happening like magic, was the hidden, tireless work of a father."



சகோதர இன நண்பர் திரு.பாலித்த அவர்களை
மீள 2010 இல் சந்தித்தபோது...



சகோதர இன நண்பர் திரு.பாலித்த குடும்பம்
2010 இல் அளவெட்டிக்கு வந்தவேளை

# இரங்கல் உரை

இணுவையூர் தந்த முதுபெரும் கூட்டுறவாளர் திரு. சி.இரத்தினசிங்கம் அவர்கள். இவர் அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவச் சங்கத்திற்குச் செய்த சேவை அளப்பரியது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காலத்தில் எமது சங்கம் இடம்பெயர்ந்து பல இடங்களில் இயங்கிய வேளைகளில் எல்லாம் மக்களிற்க எம்மால் எவ்வளவு கண்ணியமாக சேவையாற்ற முடியுமோ அந்தளவு உச்ச கட்ட சேவைகளை வழங்க வேண்டும என்பதில் மிகுந்த அக்கறையுடன் செயற்படுவார். ஆசிரியராகத் திகழ்ந்த இவர் பல இடங்களில் சேவையாற்றிய அனுபவம், ஆளுமைத்தன்மைகளைக் கொண்டு மக்களிற்கு சேவையாற்ற முன்னிற்பார்.

கூட்டுறவுத் துறையில் சுழற்சி முறையில் பல ஆண்டுகள் எமது கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருந்து சேவையாற்றினார். கூட்டுறவுத் துறையில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் நடாத்தப்படுகின்ற கூட்டங்களிற்கு அளவெட்டியில் இருந்து துவிச்சக்கர வண்டியில் சென்று அங்கு கூறப்படுகின்ற விடயங் களைக் குறிப்பெடுதது வந்து அவற்றின் மூலம் சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்தார். தனது சேவைக் காலத்தில் ஊழியர்களின் மீதும் அதிக அக்கறை கொண்டு அவர்களிற்கு கிடைக்க வேண்டிய வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதில் ஆர்வத்துடன் செயற்படுவார். எமது அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக்கா, அரும்பாடு பட்ட கூட்டுறவாளர் சிறந்த ஆசானாகிய அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**சி.விஜயரத்தினம்,**
முன்னாள் தலைவர்,
அள.மல்.பல.நோ.கூ.சங்கம்



# விநாயகர் அகவல்

**ஔவையார் அருளியது**

**திருச்சிற்றம்பலம்**

*சீதக் களபச் செந்தாமரைப்பூம்*
*பாதச்சிலம்பு பலவிசை பாடப்*
*பொன்னரைஞாணும் பூந்துகில் ஆடையும்*
*வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்*
*பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்*
*வேழ முகமும் விளங்குசிந் தூரமும்*
*அஞ்சு கரமும் அங்குச பாசமும்*
*நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்*
*நான்ற வாயும் நாலிருபுயமும்*
*மூன்று கண்ணும் மும்மதச்சுவடும்*
*இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்*

திரண்ட முப்புரி நூல் திகழொளிமார்பும்
சொற்பதங்கடந்த துரியமெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக்களிறே!
முப்பழநுகரும் மூஷிகவாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடு வினைகளைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன்செவியில்
தெவிட்டாத ஞானத்தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்ன்ன அடக்குமுபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக்கருளிக்
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள்கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக்கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய அசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலால் எழுப்புங் கருத்தறிவித்தே

அமுதநிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரததின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசெனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்திமுத்தி இனிதெனக்கருளி
என்னையறிவித்து எனக்கருள்செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடமென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல சரணே.

**திருச்சிற்றம்பலம்**

# அபிராமியந்தாதி

**திருச்சிற்றம்பலம்**

## காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்த னேஉலகு ஏழும்பெற்ற
சீரபி ராமிஅந் தாதிஎப் போதும்என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

## நூல்

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுரையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே 01
துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவது அறிந்தனமே 02

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன் நின்அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நர குக்குற வாய மனிதரையே 03

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே. 04

*பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்ர்முலையால்*
*வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்*
*அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்*
*திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.* **05**

*சென்னியது உன்பொன் திருவடித் தாமரை சிந்தையுள்ளே*
*மன்னியது உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே*
*மன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே*
*பன்னியது என்றும்உன் றன்பர மாகம பத்ததியே.* **06**

*ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்*
*கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்*
*மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கிஎன்றும்*
*துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே.* **07**

*சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரைஎல்லாம்*
*வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்*
*அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்*
*சுந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே.* **08**
*கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்*
*பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்*
*திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்*
*முருத்தன மூரலும் நீயும்அம் மேவந்தென் முன்நிற்கவே.* **09**

*நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுஉன்னை*
*என்றும் வணங்குவது உன்மலர்த் தாள்எழு தாமறையின்*
*ஒன்றும் அரும்பொரு ளேஅரு ளேஉமை யேஇமயத்து*
*அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே.* **10**

*ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்*
*வானந்த மான வடிவுஉடை யாள்மறை நான்கினுக்கும்*
*தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்*
*கானந்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே.* **11**

*கண்ணியது உன்புகழ் கற்பதுஉன் நாமம் கசிந்துபத்தி*
*பண்ணியது உன்இரு பாதாம் புயத்தில் பகல்இரவா*
*நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த*
*புண்ணயம் ஏதுதஎன் அம்மேபுவி ஏழையும் பூத்தவளே.* 12

*பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்*
*காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு*
*மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தர்க்கு இளையவளே*
*மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.* 13

*வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்*
*சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே*
*பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில் உன்னைச்*
*சந்திப் பவர்க்குஎளி தாம்எம் பிராட்டிநின் தண்ணளியே.* 14

*தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்தார்*
*மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்*
*விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ*
*பண்ணளிக் கும்சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே.* 15

*கிளியே கிளைஞர் மனத்தே கிளந்து கிளர்ந்தொளிரும்*
*ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா*
*வெளியே வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்தஅம்மே*
*அளியேன் அறிவள் விற்குஅள வானது அதிசயமே.* 16

*அதிசய மான வடி(வு)உடை யாள்அர விந்தமெல்லாம்*
*துதிசய ஆனன சுந்தர வல்லி துணைஇரதி*
*பதிசய மானது அபசய மாகமுன் பார்த்தவர்ர்தம்*
*மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே.* 17

*வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்*
*செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே*
*அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து*
*வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே.* 18

வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே. 19

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே. 20

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள்உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே. 21

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மால்இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே
அடியேன் இறந்துஇங்கு இனிப்பிற வாமல்வந்து
ஆண்டுகொள்ளே. 22

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல்லாதுஅன்பர்
கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே 23

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

பின்னே திரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனி உன்னை யான்மற வாமல்நின்று ஏத்துவனே. 25

*ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினை யும்படைத்தும்*
*காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு*
*சாத்தும் குழல்அணங் கேமணம் நாறும்நின் தாள்இணைக்(கு)என்*
*நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே.* **26**

*உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும்அன்பு*
*படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே*
*அடைத்தனை நெஞ்சத்து அழுக்கைஎல் லாம்நின் அருட்புனலால்*
*துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே.* **27**

*சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்*
*புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்*
*அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யாஅரசும்*
*செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.* **28**

*சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா*
*சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்*
*முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த*
*புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.* **29**

*அன்றே தடுத்துஎன்னை ஆண்டுகொண் டாய்கொண்டது அல்லவென்கை*
*நன்றே உனக்கினி நான்என் செயினும் நடுக்கடலுள்*
*சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே*
*ஒன்றே பலஉரு வேஅரு வேஎன் உமையவளே.* **30**

*உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில்வந்திங்கு*
*எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்*
*சமையங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும்இல்லை*
*அமையும் அமையுறு தோழியர் மேல்வைத்த ஆசையுமே.* **31**

*ஆசைக் கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்*
*பாசத்தில் அல்லல் படஇருந் தேனைநின் பாதம்என்னும்*
*வாசக் கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட*
*நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே.* **32**

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல்என பாய்அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுஉன்னை யேஅன்னை யேஎன்பன்
ஓடிவந்தே. 33

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

திங்கட் பசுவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே. 35

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளிவெளி யாகி யிருக்கும்உன்றன்
அருளேது அறிகின்றி லேன்அம்பு யாதனத்து அம்பிகையே. 36
கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் மட்டும் எட்டுத்
திக்கே அணியுந் திருவுடை யான்இடம் சேர்பவளே. 37

பவளக் கொடியில் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே. 38

ஆளுகைக்கு உன்றன் அடித்தா மரைகள் உண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உன்றன் விழியின் கடையுண்டு மேல்இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறை யேஅன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாள்நுதலே. 39

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணம்அன் றோமுன்செய்
புண்ணியமே. 40

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி இணைகொண்டு இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே. 42

பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்து இருந்தவளே. 43
தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும்ஆம்
துவளேன் இனியொரு தெய்வமுண் டாகமெய்த்
தொண்டுசெய்தே. 44

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின்
வெறுக்கையன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சைஉண்டு

*கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே*
*மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை*
*வாழ்த்துவனே.* **46**

*வாழும் படியொன்று கண்டுகொண் டேமனத் தேயொருவர்*
*வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்*
*ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்*
*சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.* **47**

*சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில்ஒன்றிப்*
*படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்*
*இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ*
*குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.* **48**

*குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட*
*வரம்பை அடுத்து மறுக்கும்அப் போது வளைக்கைஅமைத்(து)*
*அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்(து) அஞ்சல்என்பாய்*
*நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே.* **49**

*நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச*
*சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு*
*வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்(று)*
*ஆயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே.* **50**

*அரணம் பொருள்என்று அருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்*
*முரண்அன்று அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே*
*சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்*
*மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே.* **51**

*வையம் துரகம் மதகரி மாமகு டம்சிவிகை*
*பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த*
*ஐயன் திருமலை யாள்அடித் தாமரைக்கு அன்புமுன்பு*
*செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே.* **52**

*சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்*
*பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த*

கன்னஞ் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே. 53

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
அன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றிலையே. 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்துஇவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருள்அறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே. 56

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்டு அண்டம்எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே. 57

அருணாம் புயத்தும்என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும்அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிதல்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்குஅலர் ஆகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சும் மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே. 59

பாலினும் சொல்இனி யாப்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்

மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே. 60

நாயே னையும்இங்கு ஒருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறிவும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கைச்சியே. 61

தங்கச் சிலைகொண்டு தானமர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி பொர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனதச்
செங்கைக் கரும்பும் அலரும்எப் போதும்என் சிந்தையதே. 62

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறம் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்குஅன்பு பூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு தும்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில மும்திசை நான்கும் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன்அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே. 65

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்அவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்

*கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள் தொறும்*
*பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.* **67**

*பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்*
*ஊரம் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்*
*சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே*
*சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே.* **68**

*தனம்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா*
*மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா*
*இனம்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே*
*கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.* **69**

*கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்*
*பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரமும்*
*மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்*
*பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே.* **70**

*அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்*
*பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்*
*குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க*
*இழவுற்று நிறைநெஞ் சேயிரங் கேல்உனக்கு என்குறையே.* **71**

*என்குறை தீரநின்று ஏத்துகின் றேன்இனி யான்பிறக்கின்*
*நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்*
*மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்*
*தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.* **72**
*தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு*
*யாமம் வயிரவர் ஏத்தும் பொழுதுஎமக் கென்றுவைத்த*
*சேமம் திருவடி செங்கைகள் நான்குஒளி செம்மையம்மை*
*நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே.* **73**

*நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்*
*அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்*
*பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும் பொன்*
*சயனம் பொருந்தும் தமனியக் காவினில் தங்குவரே.* **74**

*தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயரின்றி*
*மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்*
*பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்*
*கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே.* 75

*குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து*
*மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி*
*வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரான்ஒரு கூற்றைமெய்யில்*
*பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே.* 76

*பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்*
*உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும்கலா*
*வயிரவி மண்டலி மாலினி சூலி வராகிஎன்றே*
*செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.* 77

*செப்பும் கனக கவசமும் போலும் திருமுலைமேல்*
*அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்*
*கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்*
*துப்பும் நிலவும் எழுதிவைத் தேன்என் துணைவிழிக்கே.* 78

*விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம்சொன்ன*
*வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்குஅவ் வழிகிடக்கப்*
*பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்*
*குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.* 79

*கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை*
*ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்*
*காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா*
*ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.* 80

*அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்*
*வணங்கேன் ஒருவரை வாழ்த்துகி லேன்நெஞ்சில் வஞ்சகரோடு*
*இணங்கேன் எனதுஉனது என்றிப் பார்சிலர் யாவரொடும்*
*பிணங்கேன் அறிவொன்றிலேன் என்கண் நீவைத்த பேரளியே.* 81

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும்நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே. 82

விரவும் புதமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையானை ஒளிமதிசெஞ்
சடையானை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங்கு என்னைஇனிப்
படையாளை உங்களை உம்படை யாவண்ணம் பார்த்திருமே. 84

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே. 85

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும் போதும் வெளிநில்கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்திஎன்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே. 87

பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பத்தருக்குள்
தரமென்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருட்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யான்இடப் பாகம் சிறந்தவனே. 88

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னி வைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம்அற்ற
உறக்கம் தரவந்து உடம்போடு உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே. 89

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியலே. 90

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊம் பதம்மருமே. 91

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே. 92

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதகண் முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதுநாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
கரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம்நன்றே. 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவது
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்கு உள்ளவெல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே. 95

*கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்*
*யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய*
*சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத் தம்மால்*
*ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே.* **96**

*ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்*
*போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி*
*காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்*
*சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.* **97**

*தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்*
*கைவந்த தீயும் தலைவந்த வாறும் கரந்ததெங்கே*
*மெய்வந்த நெஞ்சின் அல்லால்ஒரு காலும் விரகர்தங்கள்*
*பொய்வந்த நெஞ்சில் புகஅறி யாமடப் பூங்குயிலே.* **98**

*குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்*
*மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த*
*வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்*
*கயிலா யருக்குஅன்று இமவான் அளித்த கனஞ்குழையே.* **99**

*குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி*
*கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்*
*விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்*
*உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும்*
*உதிக்கின்றனவே.* **100**

# நூற் பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம்எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை அங்குச பாசங் குசமும் கரும்பு மங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்குஒரு தீங்கில்லையே.

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்!
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய இருள் நீக்கிச்
சிரந்தழுவு சைவநெறி திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தை கெடப் புகலியர் கோனமுது செயத்திருமுலைப்பால்
சுரந்து அழித்த சிவகாமசுந்தரிபூங் கழல் போற்றி

**திருச்சிற்றம்பலம்**


கண்ணீர் அஞ்சலி
அமரர்
திரு சின்னத்துரை இரத்தினசிங்கம்
( இளைப்பாறிய ஆசிரியர், யா/அருணோதயக் கல்லூரி, அளவெட்டி)
தோற்றம்: 05.10.1937 மறைவு: 05.11.2025
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினரும்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற் துறையின்
விரிவுரையாளருமான திரு. இ.சர்வேஸ்வரா அவர்களின்
அன்புத் தந்தை திரு. சின்னத்துரை இரத்தினசிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியர், அளவெட்டி அருணோதயக் கல்லூரி)
அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனை பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்திற்கு
எங்களது ஆழ்ந்த இரங்கல்களையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்


கண்ணீர் அஞ்சலி
அமரர்
சின்னத்துரை இரத்தினசிங்கம்
தோற்றம் : 05.10.1937 மறைவு : 05.11.2025
அன்பாலே அரவணைத்து
அறிவாலே ஆக்கம் தந்த மாசற்ற மணி விளக்கே
உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !
என்றும் உங்கள் நினைவில்
நலச் சேவைகள் கிளை
யாழ்ப்பாண பல்கலைக் கழகம்.


கண்ணீர் அஞ்சலி
அமரர்
சின்னத்துரை இரத்தினசிங்கம்
தோற்றம் : 05.10.1937 மறைவு : 05.11.2025
அன்பாலே அரவணைத்து
அறிவாலே ஆக்கம் தந்த மாசற்ற மணி விளக்கே
உங்களது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரிவால் துயருறும்
உப விடுதிக் காப்பாளர்கள்
யாழ்ப்பாண பல்கலைக் கழகம்

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல்துறை
விரிவுரையாளர் **இ.சர்வேஸ்வரா** அவர்களின்
அன்புத் தந்தை

**சின்னத்துரை இரத்தினசிங்கம்**
**(இளைப்பாறிய ஆசிரியர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி )**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அவரது ஆத்மா
சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**பிறப்பு**
**05.10.1937**

**இறப்பு**
**05.11.2025**

(C-4263)

***பிரிவால் துயருற்றிருக்கும் :*** **ஆசிரிய மாணவர்கள், கல்வியியல் முதுமாணி**
**கற்கைநெறி, அணி - XV, உயர் பட்டப்படிப்புகள் பீடம்,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அபிவிருத்திச் சங்க செயலாளர்
திருமதி லாவண்யா திலீபன் அவர்களின் பாசமிகு தந்தையார்

## அமரர்.சின்னத்துரை இரத்தினசிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



**மலர்வு**
**1937-10-05**

**உதிர்வு**
**2025-11-05**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு
மீளாத் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபத்தையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!!! சாந்தி!!! சாந்தி!!!

**பிரிவால் துயறுரும் -** கல்லூரிச் சமூகம்,
யா/அருணோதயக் கல்லூரி,
அளவெட்டி.

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
05 . 10 . 1937



மறைவு
05 . 11 . 2025

## அமரர் சின்னத்துரை இரத்தினசிங்கம்

நேற்று சிரித்தபடி நிஜமாய் இருந்தவரே
கண்மூடி விழிப்பதற்குள் கதை முடிந்து போனதெங்கே
பாசமெல்லாம் பற்றறுத்து பரிதவிக்க விட்டு விட்டு
ஊரே அழ வைத்து விட்டு ஓடி மறைந்ததெங்கே
உயிரோடு கலந்து உணர்வோடு உறைந்தவரே
உள்ளம் துடிக்குது உங்கள் பிரிவை தாங்காமல்
உங்கள் இதயத்தின் நேசத்தை எங்களால்
என்றும் மறைக்க முடியாது.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்
அளவெட்டி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம்

பகவான் பனர் பிறிண்டிங் வடிவமைப்பு – 0775282641 0773899195

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்
05.10.1937



இறைவன் கையில்
05.11.2025

அளவெட்டி மகாஜன சபை மற்றும் அளவெட்டி அபிவிருத்தி மன்ற உறுப்பினர்
இ. சர்வேஸ்வரா அவர்களின் தந்தை

## அமரர். சின்னத்துரை இரத்தினசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்
பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயரும்
அளவெட்டி மகாஜன சபை மற்றும் அளவெட்டி அபிவிருத்தி மன்றம்

# நன்றியுடன் நினைக்கின்றோம்...

எங்கள் குடும்பத்தின் ஆணிவேர் தன் வாழ்வை நிறைவுசெய்த போது எங்கள் இல்லம் தேடி வந்து இறுதி அஞ்சலி செய்த சமயத்தலைவர்கள், உறவுகள், நண்பர்கள், ஆசிரியப் பெருமக்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், அனைவருக்கும் எங்கள் நன்றிகள். இடருற்று நாம் நின்ற வேளையில் எம் துயர் தணிக்க ஆறுதல் வார்த்தைகளை இரங்கல் உரையிலும், தொலைபேசி, கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் தெரிவித்து நின்ற அன்புள்ளங்கள் அனைவருக்கும் நன்றிகள்.

மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், பதாகை வெளியிட்ட உபவிடுதிக் காப்பாளர்கள். கல்வி முதுமாணி மாணவர்கள், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினர் உள்ளிட்ட அளவெட்டி மகாஜன சபையினர், அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தினர் அனைவருக்கும் நன்றிகள்.

ஓடியாடித் திரிந்த எம் குடும்பத்தலைவர் தடக்கி வீழ்ந்து தொடை என்பு முறிந்த போது அவர் வயது மூப்பைக் கருதி புறமொதுக்காது சத்திரசிகிச்சை செய்த வைத்திய நிபுணர் ஸ்ரீகிருஸ்ணா மற்றும் துணை செய்த வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஐயா உள்ளிட்ட மருத்துவகுழுவினருக்கும் எங்கள் கைமாறு செய்ய இயலாத நன்றிகள். வீட்டில் வைத்துப் பராமரித்த வேளை நேரில் வந்து இயன்மருத்துவப் பயிற்சி வழங்கிய இயன்மருத்துவர் மற்றும் சித்த வைத்திய சிகிச்சை அளித்த சிகிச்சையாளர் அவ்வப்போது மருத்துவ கண்காணிப்பு வழங்கிய சகோதரி கோபிகா உள்ளிட்ட அனைவருக்கும் நன்றிகள்.

அன்புத் தெய்வம் அமரரான போது அவரது இறுதிக்கிரியைகளை செவ்வனே நிறைவேற்றிய குருக்கள் மற்றும் உறவுகள் அனைவருக்கும் நன்றிகள். அதன் பின் உரிய ஆன்மீகக் கருமங்களை நிறைவுசெய்த அந்தணப் பெருமக்களுக்கும் நன்றிகள்.

துயர்நிறைந்த நாள்களில் துணைநின்று “பட்டினித்தீன்” எனும் தமிழர் பண்பாட்டின் வழி முப்பத்தொரு நாள்களும் உணவூட்டிய உறவுகள் அனைவருக்கும் நன்றிகள். இன்னும் இன்னும் பல வழிகளில் எங்கள் துயரில் துணைநின்ற அனைத்து அன்புக்குரியவர்களுக்கும் நன்றிகள்

இவ்வண்ணம்
**குடும்பத்தினர்.**

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது,
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



**"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்"**

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

New Evergreen Printers, Jaffna. T.P.: 021 - 2219893